அறைவு 04 இயம் 36 April 09-15,2016

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

Stragers Computers
சரஸ்வதி திரையரங்கிற்கு அருகில் இடமாற்றப்பட்டுள்ளது


HELLO MOBILE WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# "வடக்குகிழக்கு மாநிலம்"

## அரசியல் தீர்வாக முன்மொழிவு



**சிறீ**லங்காவை இரண்டு மாநிலங்களாகப் பிரித்து அவற்றிற்கான அதிகாரங்களை வழங்குவதனை உறுதிப்படுத்தும் முகமாகப் புதிய அரசி-யலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை வடமாகாண சபை வெளியிட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கான தீர்வொன்றை நடைமுறைப்படுத்தும் முதற்படியாகச் சர்வதேசத்தின் ஆழத்தங்களின் பால் அரசியலமைப்பை மாற்ற முற்பட்டுள்ள நல்லாட்சி அரசிற்கு எவ்வாறான அரசியலமைப்பு பொருத்தமானது என்பதை வெளிப்படுத்தும் இரண்டாவது பெரிய முன்வரைபாக இவ்வரைபு வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவை தனது முன்மொழிவுகளை வெளியிட்டிருந்தது.

அம்முன்மொழிவில் தமிழ் மக்கள் தனித்தேசமாக (மக்கள் கூட்டமாக) அடையாளப்படுத்தப்பட்டே அரசியலமைப்பானது உருவாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படை முன்மொழிவுடன் இலங்கை ஒரு பல்தேசிய அரசாக உருவாக

## "அனல்மின்நிலையம் வேண்டாம்"
## நல்லாட்சி சனாதிபதிக்கு மக்கள் கடிதம்




பக் 17

### அனல் மின் நிலையம் தொர்பாகக்

## கிழக்கு மாகாண சபை அமைதி காப்பது ஏன்?


### திருகோணமலை மாவட்டத் தமிழ்த் தேசிய மக்கள் முன் ஏணி கேள்வி

**ச**ம்பூரில் அமைக்கப்படவுள்ள அனல் மின்நிலையத்திற்கு எதிராக நாடு முழுவதும் கருத்துருவாக்கங்கள் நிகழ்ந்து-வரும் இவ்வேளையில் கிழக்கு மாகாண சபை அனல் மின் நிலையம் சம்பந்தமாக ஆழ்ந்த மௌனத்தைக் கடைப்பிடிப்பது ஏன்? எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேள்வி எழுப்பியுள்ளது.

அக் கட்சியின் திருகோண - மலை மாவட்ட அமைப்பாளர் இரா.சிறீஞானேஸ்வரன் இக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

சர்வதேச அழுத்தத்தின்பால் சம்பூரின் காணிகளை நல்லாட்சி அரசானது விடுவித்த போது.......

பக் 17




# "பனாமா பேப்பர்ஸ்"
## பதுக்கப்பட்ட பணத்தின் உண்மைக் கதை

**கறுப்பணத்தைப்** பதுக்கி வைத்திருக்கும் சர்வதேசத் திருடர்களான உலகப் பிரபலங்கள் நானூறு பேர்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகியதை அடுத்து "பனாமா பேப்பர்ஸ்" எனும் சங்கேதக் குறியுடனான தகவல்கள் சர்வதேசத்தை உலுப்பியுள்ளன.

பனாமா நகரத்தில் உள்ள உலகின் நான்காவது மிகப் - பெரிய சட்ட நிறுவனமான மொசாக் ஃபொன்செகா என்ற சட்ட நிறுவனத்தின் ஊடாக நடாத்தப்பட்ட பணப் பரிமாற்றங்களின் ஊடாக இத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்நிறுவனத்திலிருந்து புலனாய்வுப் பத்திரிகை - யாளர்களால் கையகப் படுத்தப்பட்ட 11.2 மில்லியன் ஆவணங்களில் இருந்து பல மில்லியன் டொலர்...

பக் 17

IELTS-A1
spouse visa
@
VEAL ENGLISH COLLEGE
026 222 76 22 - 0770203201



### மாமனிதர் வ. விக்னேஸ்வரனின்
## 10ம் ஆண்டு நினைவு

| ஸ்ரீ

**தி**ருகோணமலையின் அதிபாதுகாப்பு வலயத்தினுள் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட வ.விக்னேஸ்வரன் அவர்களின் பத்தாம் ஆண்டு கடந்த 7ம் திகதி நினைவு கூறப்-பட்டது.

தமிழ் மக்களுக்காக அச்சமின்றிக் கருத்துக்-களை வெளிப்படுத்தி வந்த விக்னேஸ்வரன் தமிழ் மக்களின் சனநாயகப் போராட்டங்களுக்குத் தலைமை ஏற்று நடத்தி வந்தமை குறிப்பிடத் - தக்கது.

தனது உயிருக்கு ஆபத்திருப்பதாக

பக் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# பொய் - இறையாண்மை - அமைதி...

சம்பூரில் அனல்மின்நிலைத்தை அமைக்கும் நல்லாட்சியல்லா அரசினால் தொடங்கி வைக்கப்பட்ட முயற்சியை - நல்லாட்சி அரசும் கைவிடப் போவதில்லை என அந்நல்லாட்சி அரசின் அதிகாரம் மிகு முகவரான மின்வலுவிற்குப் பொறுப்பான அமைச்சர் அறிவித்திருப்பதுடன் எவ்வித தடைகள் வரினும் அனல்மின்நிலையத்தை அமைக்கும் பணிகளைக் கைவிடப் போவதில்லை எனச் சூழுரைத்தும் இருக்கின்றார்.

இந்நிலையில் அனல்மின்நிலையத்தால் அழிவே எஞ்சப்போகின்றது என்பதை பல்வேறுபட்ட தரப்பினரும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

அனல்மின் நிலையம் அமைக்கப்படவிருக்கின்ற பிரதேசத்தினைச் சார்ந்த மக்கள் தொடர்ந்து தமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற அதேவேளை ஆய்வாளர்கள், சூழலியலாளர்கள், ஊடகங்கள், விஞ்ஞானிகள் உட்படப் பலர் மேற்சொன்ன தரப்பிற்குள் உள்ளடங்கியுள்ளனர்.

அதேவேளை அரசியல் ஆய்வாளர்கள் இவ்வனல் மின்நிலையத்தினை அமைப்பதற்குப் பின்னால் இயங்குகின்ற அரசியல் காரணிகளை வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

திருகோணமலை என்பது என்றுமே சர்வதேசக் கப்பற் போக்குவரத்திற்கு மிக முக்கியமான கேந்திர நிலையம் என்பதும் பெரும் போர்களின் போது கடற்படைக்கான மையமாகத் தொழிற்படும் வல்லமையுள்ள புள்ளி என்பதும் வெளிப்படையானது.

இப்புள்ளியில் யாரின் கை மேலோங்கியிருக்க வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே உலகின் இரண்டு நாடுகளின் தொகுதிகளும் தமது நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றன. அதாவது மேற்குலக ஆதரவு ஆசிய நாடு அல்லது மேற்குலகுடன் முரண்படும் ஆசிய நாடு என்ற இரு வகுதிக்குள் அடங்கிக்கிடக்கும் இந்திய - சீன நாடுகளின் கைகளில், எக்கை திருகோணமலையில் மேலோங்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் புள்ளியாக அனல்மின் நிலையம் மாறியுள்ளது.

இதனைத் தெளிவாகத் தமிழர்களின் தேர்வுத் தலைமையான இரா.சம்பந்தர் அண்மையில் கூட சம்பூர் மக்களின் போராட்டத்தின் போது வெளிப்படுத்தியிருந்தார். "இந்தியன் வராவிட்டால் சீனன் வந்து குந்திவிடுவான்'' என அவர் கொலோக்கியல் தமிழில் வெளிப்படுத்திய விடயம் மிகவும் முக்கியமான அரசியல் காரணியாகி என்பதை ஆய்வாளர்கள் மீண்டும் மீண்டும் தெளிவுறுத்தி வருகின்றனர்

தமிழர்களுக்கான தீர்வு - அதற்கு முன்னராக-நிகழ்த்தப்பட்ட இனக்கொலைக்கு எதிரானச் சர்வதேச விசாரணை என்பவை பற்றிப் பேசமுயற்சிக்கும் போதே ''ஸ்ரீலங்காவின் இறையாண்மை" என்ற சுலோகத்தை ஏந்தி "தாய் நாட்டைப் பாதுகாப்போம் - தமிழர்களுக்குத் தீர்வு வழங்கோம்'' எனத் தம்பட்டம் அடிக்கும் அமைப்புக்கள் நிரந்தரமாகத் திருகோணமலையில் பூகோள முக்கியத்துவம் வாய்ந்த புவிசார் நிலப்பரப்பு அந்நிய நாடொன்றின் கைகளில் விழப்போவதையிட்டுக் கிஞ்சித்தேனும் அலட்டிக் கொள்ளவில்லை.

ஆக, ஸ்ரீலங்காவின் இறையாண்மை என்பது அன்னிய சக்திகளின் ஆதிக்கத்திற்கு அடங்கிப்போவதும் சகோதரத் தேசிய இனத்தின் சமஸ்டி வாழ்விற்கு எதிர்த்து நிற்பதும் என்பதாகிப் போயிருக்கின்ற நிலையில் அனல் மின்நிலையம் சம்பந்தமாகத் தமிழ்த் தலைமைகள் வடகிழக்கில் கடும் அமைதி காத்து வருகின்றமை ஏன் எனக் கேள்வி எழுந்துள்ளது.

கிழக்கின் மாகாண சபை அனல்மின்நிலையம் தொடர்பாக எவ்வித ஆய்வுகளையோ அல்லது மக்கள் கருத்துக் கணிப்பையோ முன்னெடுக்காது சம்பூரும் அப் பிரதேசத்தில் அமையவிருக்கின்ற அனல்மின்நிலையமும் தமது மாகாணத்திற்குட்பட்ட பிரதேசம் அல்ல என்றதான நிலையில் இருக்கின்றது.

இதேவேளை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஏனைய அனைவரும் அனல்மின் நிலையம் தொடர்பாக ஆழ்ந்த மெளனமே சாத்தித்து வருகின்ற நிலையில் மக்கள் போராட்டங்களின் போது வேறு வழியின்றி அங்கு வருகை தந்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருந்த கருத்துக்களில் முக்கியமானவை உண்மைக்குப் புறம்பாயிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

அனல் மின்நிலையத்தால் இரண்டு பிரச்சனைகள் மட்டுமே மக்களுக்கு ஏற்படும் எனத் தெரிவித்திருந்த - துடன் நுரைச்சோலை அனல் மின்நிலையத்தினால் அங்குள்ள மக்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுப் பயனடைகின்றார்கள் என அவர் தெரிவித்திருந்ததும் பொய்த்துப் போயுள்ள நிலையில் மக்களினால் தேர்வு செய்யப்பட்ட தலைவர்களின் தலையாய கடமை அரசியன் கட்டளைகளைப் பாதுகாப்பதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

பொய்யைய் விட அமைதி மிகச் சிறந்ததோ என்ற எண்ணம் மக்களிடையே மேலோங்கி நிற்கின்றது.

## கந்தளாயில் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பம்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கந்தளாயில் உணவுகளை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களைப் சோதிக்கும் நடவடிக்கைகள், கடந்த வியாழக்கிழமை (07) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கந்தளாய் பிரதேச சபை அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம், காலாவதியான உணவு மற்றும் குளிர்பானங்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா ஏன்பது தொடர்பில் சோதனை செய்யப்படவுள்ளதாக கந்தளாய் பெர்துச் சுகாரதார வைத்திய அதிகாரி மருத்துவர் ருவன் திலக்க தெரிவித்தார்.

கந்தளாய் பிரதேசத்தின் கந்தளாய் நகரம், வான்எல, வட்டுக்கச்சி மற்றும் முள்ளிப்பொத்தானை ஆகிய பகுதிகளில் வீதி ஓரங்களில் அமைக்கப்பட்டுள்ள விற்பனை நிலையங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

காலாவதியான இனிப்புப் பண்டங்கள் குளிர்பானங்கள் விற்பனை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகக் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது அதில் அச்சிடப்பட்டுள்ள காலாவதியான திகதி குறித்து அவதானம் செலுத்துமாறு நுகரவோரிடம், கந்தளாய் சுகாரதார வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஹலீம்)

## கடும் வரட்சி

திருகோணமலை மாவட்டத்தில் கடும் வரட்சி நிலை காரணமாக உப உணவுப் பயிர் மற்றும் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டோர் பெரும் பாதிப்படைந்து வருகின்றனர்.

கிணறுகள் வற்றிப் போவதும், தொடரற்ற மழையின்மையுமே இதற்கான காரணங்களாகும்.

இதேவேளை வீட்டு முற்றங்களில் அழகுக்காக வளர்க்கப்பட்ட பூந்தோட்ட - ங்களும் பெரும் அழிவுக்குள்ளாகி வருகின்றன.

குறிப்பாக மீள்குடியேறிய சம்பூர் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுஉள்ளனர்.

தொடர்ந்தும் இந்நிலை தொடருமாக விருந்தால் மக்களுக்கு நோய்த் தொற்றுக்கள் ஏற்படும் ஆபத்தும் காணப் படுகின்றது.

(அச்சுதன்)

## அனல்மின்நிலையம் தொடர்பான செயலமர்வு இன்று

(அச்சுதன்)

மூதூர் அனல் மின்சார நிலையத்தினால் ஏற்படும் அபாயம் சம்பந்தமான செயலமர்வொன்று இன்று சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் மூதூர் சேப் ரெஸ்ட் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மூதூர் பசுமைக்குழுவோடு இணைந்து நெளபால்தீன் நற்பணி மன்றம் ஏற்பாடு செய்துள்ள இச்செயலமர்வில் சமூக நலனில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளமுடியுமென மன்றத்தின் தலைவர் எம்.ஐ. நெளபால்தீன் தெரிவித்துள்ளார்.

மூதூர் செயலகப் பிரிவில் சம்பூர் பகுதியில் அமைகபடவுள்ள அனல்மின்சார திட்டத்திற்கு எதிராக பத்து அமைப்புக்கள் ,ணைந்து ஏற்படுத்திக் கொண்ட மூதூர் பசுமைக்குழு அமைப்பில் நெளபால்தீன் நற்பணி மன்றமும் முக்கிய பங்கெடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## திருவள்ளுவர் குருபூசை



திருக்கோணமலை அருள்மிகு விஸ்வநாதசுவாமி (சிவன்) அறநெறிப் பாடசாலை- யில் திருவள்ளுவர் குருபூசை அண்மையில் கொண்டாடப்பட்டது.

அறநெறிப் பாடசாலை மாணவ - மாணவிகள் சொற்பொழிவுகள் ஆற்றுவதைப் படங்களில் காணலாம். (அச்சுதன்)

## சேதனப் பசளையைப் பயன்படுத்துங்கள்

### மாவட்ட அதிபர் வேண்டுகோள்

திருகோணமலை மாவட்ட விவசாய குழுக்கூட்டம் கடந்த 5ம் திகதி திருமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமாரவின் தலைமையில் நடைபெற்றது.

விவசாயிகள் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்கின்ற போது இரசாயன பசளைகளுக்குப் பதிலாக சேதனப் பசளைகளை பயன்படுத்துவதன் மூலம் உடல் நலம் பாதுகாக்கப்படும் என்றும் தற்போது இரசாயன வளமாக்கி பாவனை காரணமாக பல பாதிப்புக்களை பொதுமக்கள் எதிர் நோக்கி வருவதாகவும் மாவட்டச் செயலாளர் இங்கு கருத்துரைக்கும் போது தெரிவித்தார்.

அத்துடன் இருக்கக் கூடிய நீர் வளத்தை உச்ச முறையில் திட்டமிட்டு பயன்-படுத்துவதன் மூலம் பல நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியுமென்றும் [illegible] உற்பத்திக்கு பதிலாக விவசாயிகள் உப உணவுப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதன் மூலம் சந்தைப்படுத்தல் போன்ற பிரச்சினைகள் ஏற்படாது என்றும் அவற்றுக்கு உயரிய வருமானம் கிடைக்கும் என்றும் மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்வது தொடர்பான விடயங்கள், நீர்ப்பாசன திணைக்கள செயற்பாடுகள் உட்பட ஏனைய துறைசார் திணைக்-களங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.



வேலைவாய்ப்பு - கணக்கு உதவியாளர்கள்
உயர்தரத்தில் கணக்கீடு கற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
அழையுங்கள் – 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இலங்கைச் செய்திகள்
யாழ்ப்பாணம்

## 2020இல் சனாதிபதி அல்லது பிரதமராகும் கனவில் – கோத்தபாய



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் நிலவும் நெருக்கடியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அல்லது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் ஏதாவது ஒரு வழிமுறையில் தீர்த்து வைக்கப்படும். எதிர்வரும் 2020ஆம் ஆண்டில் ஜனாதிபதி அல்லது பிரதமர் வேட்பாளராக தீர்மானமிக்க சந்தர்ப்பத்தில் தகுதியான வேட்பாளராக கோத்தபாய ராஜபக்சவை நியமிப்பதற்கு வாய்புள்ளதாக அரசியல் ஆலோசர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் மஹிந்த ராஜபக்சவுடன் அவதானத்துடன் செயற்படுமாறு கோத்தபாய-வுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய கோத்தபாய ராஜபக்ச ஒரு மூலோபாயமாக சில தீர்மானமிக்க சந்தர்ப்பத்தில் மாத்திரம் அரசியல் அறிக்கைகளை விடுவதுடன், அமைதியான மட்டத்தில் இருந்து அரசியல்வாதியாக தனது மதிப்பினை அதிகரித்து கொள்ளவுள்ளார். இதேவேளை, கூட்டு எதிர்க்கட்சியின் தலைமை பதவிக்கு கோத்தபாய ராஜபக்சவை பெயரிடுமாறு அதன் பொரும்பான்மையினரால் விடுக்கப்பட்ட கோரிக்கையினை மஹிந்த நிராகரித்ததோடு பசில் ராஜபக்சவின் ஆலோசனைக்கமைய மாத்திரம் எதிர்கால அரசியல் நடவடிக்கைகயை மேற்கொள்ளுமாறு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுன்னாகப் பிரச்சினைக்கும் எனக்கும் எதுவித தொடர்புமில்லை

### பொ.ஐங்கரநேசன்



சுன்னாகம் குடிநீர் பிரச்சினை தொடர்பான நேற்றைய வழக்கு விசாரணையின் போது வட மாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், மல்லாகம் நீதவான் ஏ. ஜூட்சன் முன்னிலையில் தமக்கு தனிப்பட்ட வகையில் பொறுப்பில்லை என தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு வட மாகாண சபையே பெhறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, சுன்னாகம் குடிநீர் பிரச்சினைக்கு மத்திய அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என இன்றைய விசாரணையின் போது மத்திய சுற்றாடல் அதிகார சபை, மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளது. சுன்னாகம் குடிநீர் பிரச்சினை தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தால் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீனா – இலங்கை ஒப்பந்தம்

### விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள துறைமுக நகர வேலைத்திட்டம்

துறைமுக நகரத்திட்டத்தினை ஆரம்பிப்பது தொடர்பில் சீன அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் ஒருமித்த ஒத்துழைப்பை வழங்கியுள்ளதாக அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

சீன ஜனாதிபதிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பினைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் சரத் அமுனுகம மேற்படி தெரிவித்தார். துறைமுக நகரத் திட்டம் தொடர்பில் பின்பற்றப்படாமலிருந்து சில சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு, விரைவில் துறைமுக நகரத்திட்டத்தினை மேற்கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சீன ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.




மேலும் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வுக்காக சீன அரசாங்கம் பாரியளவு அம்பியூலன்ஸ் வண்டிகளை வழங்கவுள்ளதுடன், 600 புலமைப்பரிசில்களை இலங்கை மாணவர்களுக்கு வழங்க, சீன அரசாங்கம் முன்வந்திருக்கிறது. அத்துடன் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிகளை இலங்கைப் படையினருக்கு வழங்குவதற்கும் சீன அரசாங்கம் முன்வந்திருப்பதாகவும் அமைச்சர் சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார்.

## கைப்பற்றப்பட்டது ஹெரோயின்

### ஒருவர் கைது

கொழும்பில் காவல்துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றை அடுத்து கொழும்பு தொட்டலங்க பிரதேசத்தில் சோதனை மேற்கொள்ளப்பட்ட போதே சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவித்துள்ள காவல்துறை, சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.




## தற்கொலை அங்கி கைப்பற்றலை தொடர்ந்து சந்தேகத்தில் ஐவர் கைது

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பகுதியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருட்கள் தொடர்பில் மேலும் ஐவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்ட சந்தேக நபரது தொலைபேசியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட அழைப்புகள் மற்றும் உள்வந்த அழைப்புகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், நெல்லியடி மற்றும் சாவக்கச்சேரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்த தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் இதுதொடர்பில் ஐ.பி.சி தமிழ் செய்திப் பிரிவு பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு மற்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஆகியோரிடம் தொடர்புகொண்டு வினவியபோதிலும் தகவல்களைத் தருவதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர்.

## கைப்பற்றப்பட்ட துப்பாக்கி தொடர்பில் விசாரணை

தமிழ் அரசியல் கட்சியொன்றின் உறுப்பினர் என தெரிவிக்கப்படுகின்ற ஒருவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சட்டவிரோதமான கைத்துப்பாக்கிக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியமை சட்டரீதியானதா என்பது குறித்து ஆலோசனை பெற்று நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு அரச சட்டத்தரணிக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் பணித்துள்ளார்.


## பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ்

### தொடரும் கைதுகள்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஏழு இராணுவத்தினரும் 3 கடற்படையினரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார். கடந்த ஜனவரி மாதம் 14ம் திகதி முதல் இந்த கைதுகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பாதுகாப்பு தரப்பினர் குறித்த தகவல்களை வெளிப்படுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்தே விசேட அறிக்கை ஒன்றை முன்வைத்து மேற்படி தகவல்களை அமைச்சர் வெளியிட்டிருந்தார்.

## முன்னால் ஜனாதிபதிக்கு அரச மாளிகை கையளிக்கப்பட்டுள்ளது!



பொது நிர்வாக அமைச்சுக்குச் சொந்தமாக, கொழும்பு 07 - விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அரச மாளிகையொன்றை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பயன்பாட்டுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால், நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட ஆவணமொன்றில், இது தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்சவின் பயன்பாட்டுக்காக 2015ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ஆம் திகதியன்று, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள பீ-106ஆம் இலக்கத்தை-உடைய மேற்படி மாளிகை ஒதுக்கீடு செய்யப்பட்டதாக, அந்த ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## 350 இலிருந்து 400 க்கு உயர்த்த கோரிக்கை

அமைச்சரொருவர் கொள்வனவு செய்யும் வாகனத்துக்காக, அரசாங்கத்தினால் வழங்கப்படும் 350 இலட்சம் ரூபாய் கொடுப்பனவை 400 இலட்சம் ரூபாயாக அதிகரிக்குமாறு பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார். இலங்கைப் பெறுமதியில், 700 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள டீஆறு 7-ளுநசநைள ரக வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு, அமைச்சர் பொன்சேகா தீர்மானித்துள்ள நிலையிலேயே, மேற்படி கொடுப்பனவை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார் என அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இலங்கைச் செய்திகள்



## சிறீலங்காவின் சர்வதேசக் கொள்கை
# சீனா புகழாரம்

சனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் வெளிநாட்டுக் கொள்கைகளை சீன அரசாங்கம் பாராட்டியுள்ளது.

சீன ஜனாதிபதி சீ ஜிங் பிங், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தபோதே பாராட்டு தெரிவிக்கப்பட்டதாக பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டது.

சீனாவிற்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று மாலை அந்நாட்டு சனாதிபதி சீ ஜிங் பிங்கை சந்தித்துள்ளார்.

இலங்கைகக்கு உதவிகளை வழங்கும் போது அரசியல் கட்சி அல்லது தனிப்பட்டோர் தொடர்பில் கவனம் செலுத்தாது நாட்டு மக்கள் மற்றும் நாட்டினது கொள்கை தொடர்பில் மாத்திரமே அவதானம் செலுத்தப்படும் என இந்த சந்திப்பின் போது சீன சனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கொழும்பு துறைமுக நகர் திட்டத்தை மீள ஆரம்பிக்கக் கிடைத்தமை மகிழ்சிக்குரிய விடயமெனவும் சீன ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் அபிவிருத்திக்கு இயன்றளவிலான உட்சபட்ச உதவிகளை வழங்க சீன அரசாங்கம் இணங்கியுள்ளதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீ

## சட்டவிரோதப் பயணிகள் பிணையில் விடுதலை



சட்டவிரோதமாக பாரிய படகொன்றில் பயணித்த போது யாழ். பருத்தித்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 11 பேர் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.


தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் சந்தேக - நபர்கள் விடுதலை செய்யப் - பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் யாழ். மாவட்ட பணிப்பாளர் ரமேஸ் கண்ணா குறிப்பிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாரிய படகொன்றில் இரு புறமும் இரண்டு சிறிய படகுகள் பொருத்தப்பட்ட நிலையில் பயணித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் கடற்படையினரால் 7ம் திகதி இரவு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்தப் படகிலிருந்து 30 ஒட்சிசன் சிலிண்டர்களும் கைப்பற்றப்பட்டுள்ளன..

# மீள்குடியேற்ற ராசாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா காணிகளைப் பறிக்கின்றார்
# தமிழ் விவசாயிகள் காவல்துறையில் புகார்




மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பூலாக்காடு பிரதேசத்தில் பொதுமக்களுக்கு சொந்தமான வயல் நிலங்களை, மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா அத்துமீறி சுவீகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு - ள்ளதாக பாதிக்கப்பட்டோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பறிப்புத் தொடர்பாக பிரதேச விவசாயிகள் இன்று காலை வாழைச்சேனை காவல்நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளனர்.

இதனை தொடர்ந்து காவல்துறையினர் குறித்த பிரதேச - த்திற்கு சென்று பாதிக்கப்பட்டோரின் சாட்சியங்களை நேரடியாக பதிவு செய்தனர்.

இதன்போது அங்கு 2 ஜேசிபி இயந்திரங்கள் வயல் நிலங்களை துப்பரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதை அவதானித்ததோடு, குறித்த வேலையை நிறுத்துமாறும் அங்கு வேலையில் ஈடுபட்டிருந்த வேலையாட்களை வாழைச்சேனை காவல் நிலையத்திற்கு வருகை தந்து முறைப்பாட்டுக்கான வாக்கு மூலத்தினை நாளை பதிவு செய்யுமாறும் காவல்துறை யினர் அங்கிருந்தவர்களிடம் தெரிவித்ததாக விவசாயிகள் தகவல் தெரிவித்தனர்.

# தமிழ் பெண்களை அடிமையாக நடத்தாதே !
# மன்னாரில் பெண்கள் ஆர்ப்பாட்டம்




மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள ஆடைத் - தொழிற்சாலையில் கடமையாற்றும் பெண்கள் தமக்கு உரிய முறையில் விடுமுறை வழங்கப்படுவதில்லை எனவும் தாம் அடிமைகள் போல் பயன்படுத்தப்படுவதாக கூறி குறித்த ஆடைத்தொழிற்சாலையில் கடமை- யாற்றும் பெண்கள் நேற்றுக் காலை முதல் பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை அனைவருக்கும் விடுமுறை வழங்குவதாக தெரிவித்து தொடர்ச்சியாக இரவு பகல் பாராது அடிமைகள் போல் வேலை செய்த நிலையில் தற்போது குறித்த விடுமுறை தொடர்ச்சியாக வழங்க முடியாது என ஆடைத்தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்தது.

இந்த நிலையில் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, மன்னார் ஆயரின் செயலாளர் அருட்தந்தை எ.முரளிதரன் உள்ளிட்ட குழவினர் கலந்துரையாடல்களை மேற்கொண்டதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டு பெண்கள் வேலைக்குத் திரும்பினர்.

## மஹிந்தவுடன் இணைவாரா டக்ளஸ் ?



மட்டக்களப்பு இனிவரும் தேர்தல்களில் கூட்டாகப் போட்டியிடுவது குறித்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஈபிடிபி கட்சியும் பேச்சுக்களை நடத்தியிருக்கின்றன.

சிறிலங்கா அதிபரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் பேரில், கட்சியின் பொதுச்- செயலர் மகிந்த அமரவீர, நட்புக் கட்சிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கிறார்.

வரும் தேர்தல்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டி - யிடுவது குறித்தே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாக, டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈபிடிபி குழுவுடன், பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. கடந்த 5ஆம் நாள் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் இணைந்து போட்டியிடுவது குறித்து நடத்தப்பட்ட பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளதாக, அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விரைவில் ஈபிடிபியுடன் இன்னொரு சுற்றுப் பேச்சு நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## நெல்விற்பனையில் சிக்கல்

நாடளாவிய ரீதியில் நெல் கொள்வனவு தற்போது இடம்பெற்று வருகின்ற போதிலும், விவசாயிகள் நெல்லை விற்பனை செய்வதில் பாரிய சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர்.

உரிய நேரத்தில் நெல் கொள்வனவு இடம்பெறாமையால் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நெல் சந்தைப்படுத்தல் சபை தற்போது நாடளாவிய ரீதியில் விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்து வருகின்றனது.

எனினும், மட்டக்களப்பில் நெல் கொள்வனவு தாமதமாக ஆரம்பிக்கப்பட்டமையால் பாரிய நட்டத்தை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## இராசதந்திரக் கடவுச்சீட்டில் வீட்டு வேலைக்குச் சென்ற கடற்படையினர்?



பசில் ராஜபக்சவின் மகனின் வீட்டில் சமையல் வேலைகளை செய்வதற்காக சிறிலங்கா கடற்படையினர் இருவர், இராஜதந்திரக் கடவுச்சீட்டில் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்- பட்டது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மகிந்த ராசபக்ச ஆட்சிக்காலத்தில் சிறிலங்கா துாதரகத்தில் தோட்டவேலை செய்பவர்கள் என்று கூறி அனுப்பப்பட்ட இரு கடற்படையினர் கலிபோர்னியாவில் உள்ள பசில் ராஜபக்சவின் மகனின் வீட்டில் சமையல் செய்யவே அனுப்பி வைக்கப்பட்டனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## சக்தி சேமிப்பிற்காக விடுமுறை

வெனிசுலா

வெனிசுவேலாவில் ஏற்பட்டுள்ள மாபெரும் சக்தி நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக, அடுத்த இரண்டு மாதங்களுக்கு, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டின் ஜனாதிபதி நிக்கொலஸ் மதுரோ, தெரிவித்தார். நாட்டின் அரச தொலைக்காட்சியில், ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக உரையாற்றிய ஜனாதிபதி, "நீண்ட வார இறுதி நாட்களை நாம் கொண்டிருப்போம்" எனத் தெரிவித்தார். இதன்போதே அவர், அடுத்த 60 நாட்களுக்கு சக்தியைச் சேமிப்பதற்கான நடைமுறைகள் குறித்து விளக்கமளித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய வறட்சியைத் தொடர்ந்து, சக்தி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. வெனிசுவேலாவின் மொத்த மின்சார உற்பத்தியில் 60 சதவீதம், நீர்மின்சாரத்திலேயே தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 300 பேரில் 175வர் கொலை செய்யப்பட்டனர்

சிரியாவில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலையில் பணியாற்றிய சுமார் 300 தொழிலாளிகளை ஐ.எஸ் தீவிரவாதிகள் கடத்தியுள்ளதாகவும், அவர்களில் 175 பேரை கொன்று குவித்துள்ளதாகவும் அந்நாட்டு ராணுவம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், சிரியா ராணுவம் மூலம் பெறப்பட்ட தகவல்களை சிரியா செய்தி ஏஜென்சியான சானா இந்த தகவலை வெளியிட்டுள்ளது. இந்த செய்தியை சிரியா தொழிற்துறை அமைச்சகமும் உறுதிப்படுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தொழிற்சாலையின் நிர்வாகிகள் கடந்த திங்கள் கிழமை முதல் கடத்தப்பட்ட தொழிலாளிகளை தொடர்புகொள்ள முடியவில்லை என அச்சம் தெரிவித்துள்ளது.

## "பனாமா பேப்பர்ஸ்" இல் சிக்கியுள்ளனர் பல பிரபலங்கள்

பனாமா

பனாமா நாட்டைச் சேர்ந்த 'மொசாக் பொன்சேகா' என்ற சட்ட நிறுவனத்திலிருந்து 11.5 மில்லியன் ஆவணங்கள் கசிந்ததில், உலக நாடுகளின் தலைவர்களும், பிரபலங்களும் தங்களின் கறுப்புப் பணத்தை வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ளமை தெரியவந்துள்ளது.

மறைந்த தனது தந்தையால் உருவாக்கப்பட்ட வெளிநாட்டு நிறுவனத்தின் பங்குகளே தமக்கும் தனது பாரியாருக்கும் சொந்தமாக இருந்ததாக பிரித்தானிய பிரதமர் டேவிட் கெமரன் தெரிவித்துள்ளார். எனினும் 2010 ஆம் ஆண்டு குறித்த நிறுவனத்தின் பங்குகளை 30,000 பவுண்ஸ்சிற்கு தாம் விற்பனை செய்ததாக பிரித்தானிய தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியொன்றில் டேவிட் கெமரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த நிறுவனத்தால் இலாபடைந்துள்ளதை அசாதாரணமான முறையில் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு டேவிட் கெமரன் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார் என தொழில் கட்சி சுட்டிக் காட்டியுள்ளது. பிளாமோர் இன்வெஸ்ட்மெண்ட் ட்ரெஸ்ட் என்ற நிறுவனத்தின் பங்குதாரராக டேவிட் கெமரனின் தந்தை செயற்பட்டிருந்தமை கசிந்த பனாமா சட்ட நிறுவன ஆவணத்தில் மூலம் தெரியவந்திருந்தது.

அத்துடன் பிரபல இந்திய நட்சத்திரங்களான அமிதாப் பச்சன், ஐஸ்வர்யா ராய் உள்ளிட்ட 500ற்கும் மேற்பட்ட இந்தியர்கள் வரி மோசடி செய்து, பனாமா நாட்டில் பணத்தை பதுக்கி வைத்திருப்பதாக "பனாமா பேப்பர்ஸ்" வெளியிட்டுள்ள தகவலில் தெரியவந்துள்ளது. தவிர, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினின் உறவினர்கள், உதவியாளர்கள், சவுதி அரேபிய மன்னர், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் உள்ளிட்ட உலகத் தலைவர்களும் தங்களது கணக்கில் வராத சொத்துக்களை பதுக்கி வைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த விவகாரத்தில் சிக்கிய ஐஸ்லாந்துப் பிரதமர் டேவிட் குன்லக்சனுக்கு எதிராக அந்நாட்டுப் பாராளுமன்றத்தில் எதிர்ப்புக் கிளம்பிய நிலையில், அவர் தனது இராஜினாமாவை கடந்த 5ம் திகதி அறிவித்தார். இந்நிலையில், வடகொரியாவின் அணு ஆயுதத் திட்டத்திற்கும் மொசாக் பொன்சேகா நிறுவனம் உதவியுள்ளமை தெரியவந்துள்ளது.





## தாக்குதல் தற்காலிக நிறுத்தம்

ஐ.எஸ்.ஐ.எஸ் இடமிருந்து ஈராக்கின் வடக்கு நகரான மொசூலை மீளக்கைப்பற்றும் ஈராக்கிய இராணுவத்தின் முதற்கட்ட நடவடிக்கையானது, கைப்பற்றிய இடங்களைத் தக்க வைப்பதற்கு மேலதிக படைகள் வந்தடையும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பொறுப்பான தளபதி கடந்த புதன்கிழமை அறிவித்துள்ளார்.

படை நடவடிக்கை ஆரம்பித்து மூன்று வாரங்கள் கடந்துள்ள நிலையில், மக்மூர் பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ் இடமிருந்து மூன்று கிராமங்களையே ஈராக்கியப் படைகள் மீளக்கைப்பற்றியுள்ளன. மேற்படி இடத்திலிருந்து வடக்காக 60 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மொசூலை கைப்பற்றுவதற்கு மேலதிக தாக்குதலை நடாத்துவதற்கு இவ்விடம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதேவேளை, பலூஜா நகரத்துக்கு கிழக்கேயுள்ள அல்-மாஅமேல் கிராமத்திலுள்ள இராணுவ நிலைகள் மீது ஐ.எஸ்.ஐ.எஸ் நடாத்திய தாக்குதலில் ஈராக்கியப் படையினர் எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.



## ஐரோப்பிய ஒன்றியத்தில் பணியாற்றியவரா ப்ரஸல்ஸ் குண்டுதாரி?

ப்ரஸல்ஸில் இடம்பெற்ற மோசமான குண்டுத் தாக்குதல்களை நடாத்திய ஒருவர், ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் 2009ஆம் ஆண்டு, 2010ஆம் ஆண்டின் கோடைகால விடுமுறைகளின்போது ஒவ்வொரு மாதம், அப்போது மாணவராக இருந்த அவர், துப்புரவுத் தொழிலாளியாக ஒரு தடவை பணியாற்றியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் யார் அந்த குண்டுதாரி என்ற அடையாளத்தை வெளிப்படுத்தவில்லை. இந்நிலையில், மேற்குறிப்பிட்ட குண்டுதாரி, விமானநிலையத்தில் தாக்குதல்களை மேற்கொண்ட நஜிம் லாச்ரஔய் எனத் தகவல் மூலங்கள் தெரிவிக்கின்றன. ஐ.எஸ்.ஐ.எஸ்-ஆல் ப்ரஸல்ஸ் விமானநிலையத்தின் மீதும் மெட்ரோ ரயில் நிலையத்தின் மீதும் மேற்கொளளப்பட்ட தாக்குதல்களில் 32 பேர் கொல்லப்பட்டிருந்தனர். கடந்த நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட பாரிஸ் தாக்குதல்களின் பிரதான சந்தேக நபர்களில் ஒருவரான நஜிம் லாச்ரஔய், ஸவன்டெம் விமானநிலையத்தை இலக்கு வைத்த குண்டுதாரிகள் இருவரில் ஒருவராக பெயரிடப்பட்டிருந்தார்.



## உத்தியோகபூர்வமாக சேவை நிறுத்தம்

கனடாவில் நீண்ட காலமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட சீ 130 ஈ ஹேர்க்கூலீஸ் விமான உத்தியோகபூர்வமாக பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டுள்ளது. குறித்த விமான இறுதியாக நியூ ஜேசி தலைநகர் இட்ரென்டனில் இருந்து ஒட்டாவாவிற்கு பயணம் மேற்கொண்டதாக கனேடியத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

மிகப் பெரிய இராணுவ போக்குவரத்து விமானமான சீ 130 ஈ ஹேர்க்கூலீஸ், 50 ஆண்டுகளுக்கும் அதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. ஒட்டாவா ரொக்கிளிப் விமான நிலையத்தில் இறுதியாக தரையிறக்கப்பட்ட குறித்த விமானம், தற்போது கனடாவின் விமான போக்குவரத்து மற்றும் விண்வெளி அருங்காட்சியகத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டுள்ளது. குறித்த விமானம் அருங்காட்சியகத்தின் நிரந்தர சேகரிப்பு பொருளாக காட்சிப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



## நாடுகடத்தப்படும் குடியேற்றவாசிகள்

கிரேக்கத்தில் இருந்து இரண்டாவது தொகுதி குடியேற்றவாசிகள் துருக்கிக்கு நாடுகடத்தப்படவுள்ளனர். ஐரோப்பாவிற்குள் பிரவேசிக்கும் அனுமதியற்ற குடியேற்றவாசிகளின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் எட்டப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த குடியேற்றவாசிகள் திரும்பி அனுப்படவுள்ளனர்.

முதலாவது தொகுதி அனுமதியற்ற குடியேற்றவாசிகள் கடந்த திங்கட்கிழமை துருக்கிக்கு திருப்பி அனுப்பட்டனர். எனினும் இறுதி நிமிடத்தில் புகலிடம் கோரி பலர் விண்ணப்பித்ததை அடுத்து குடியேற்றவாசிகளை திரும்பி அனுப்பும் நடவடிக்கை தாமதமடைந்திருந்தது. இந்த நிலையில் குடியேற்றவாசிகளை ஏற்றிய இரண்டு படகுகள் இன்று துருக்கியை சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....

**மக்கள் முரசு**

➡ வித்தியா சாகரன்




போர்ச் செலவுகள் கடந்து இதற்காகவே அமெரிக்கா பல கோடி மில்லியன் டொலர்களை செலவு செய்திருக்கிறது. எதற்காக என்றால்? நிரந்தரமாக களத்தில் இருந்து விழுப்புண் அடைந்து வெளியேற்றப்பட்டவர்கள், மனநிலை பாதிக்கப்பட்டு விட்டோடியவர்களின் புனர்வாழ்வு, காணாமல் போனவர்களை தேடுவதற்கு என்று இறைக்கப்பட்ட டொலர்கள் ஏராளம். இப்படி என்றால் வடக்கு வியட்நாம் மற்றும் வியட்காங் படைகளின் செயல்வீச்சு, மனோபலம் இவற்றை இங்கே உணர்ந்து கொள்ள முடியும். எம்முள் வாழ்ந்த ஒரு தலைமை அடிக்கடி சொல்வார் "துன்பத்தை தந்தவனுக்கே அதனை திருப்பிக் கொடு" என்றார். வியட்நாமியர்கள் அதனைத் திருப்பிக் கொடுத்தார்கள்.

குறிப்பாக 1965 தொடக்கி 1973 வரைதான், வியட்நாமில் இந்த கோர யுத்தம் உச்சம் பெற்று இருந்ததாக சொல்கிறார்கள். 1975 இல் தென் வியட்நாமில் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்த அமெரிக்க கொடிகளை சத்தமில்லாமல் இறக்கிக் கொண்டு சந்தடியில்லாமல் ஒரு இரவில் இறுதியாக வெளியே ஓடியே போய்விட்டது அமெரிக்க கூட்டு வல்லாதிக்க படைகள்.

ஆனால் இது யுத்தம். பனிப்போரில் ஒரு அங்கம்.

"நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் போராட்டமே எமது வாழ்க்கையாகவும், வாழ்க்கையே எமது போராட்டமாகவும் மாறிவிட்டது." இது எமக்குள் ஒருவர், எமக்காகச் சொல்லி சென்றது. இல்லையில்லை உலகுக்கே சொல்லிச் சென்றார். இந்த வாக்கு எமக்கு பொருத்தமோ இல்லையோ, போராடுகின்ற அனைத்து உயிர்களுக்கும் பொருத்தமானது. அனைத்து இனங்களுக்கும் பொருத்தமானது. இப்படி ஒரு வாழ்க்கையையும் போராட்டத்தையும் தலைமேல் ஏற்று நடந்ததனால்தான் வியட்நாம் தமது மண்ணை வல்லாதிக்கத்திடமிருந்து பறித்துக் கொண்டது. தாம் மீட்ட மண்ணின் ஒரு பெரும் நகரத்துக்கு ஹோசிமின் சிட்டி என்று அந்த மனிதரின் பெயரையும் வைத்து கௌரவப் படுத்தியது.

பனிப்போரின் இனிய நல்விளைவாக பார்க்கக் கூடிய இந்த வியட்நாம் யுத்தம் பனிப்போரின் அங்கமாகும். சரி. வியட்நாம் வெற்றிக்குப் பின்னால் யார் இருந்தார்கள்? யாரால் அது வழிநடத்தப்பட்டது?

அது வல்லரசு கனவுக்காக அமெரிக்காவுடன் போட்டிபோட்ட இரசியா என்ற பெரும் நாடுதான் வியட்நாமுக்குப் பின்னால் நின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. வியட்நாம் போராட்டத்தை சும்மா கொரில்லா யுத்தமாக பார்க்கவேண்டாம். அந்த மரபுவழிப் போரில் கெரில்லா முறை ஒரு வழியாகப் பயன்படுத்தப்பட்டதுதான் உண்மை. ஏனென்றால் இந்த போரில் சுமார் 154 போர் விமானங்களை வடக்கு வியட்நாம் அரச படையும், வியட்காங்கும் இழந்து இருக்கிறது. அதில் **MIG** ரக விமானங்களும் உள்ளடக்கம். அதேநேரம் ரசிய தயாரிப்பு போர்த்தாங்கிகள், ஆட்டிலறிகள் என்று ரசியா அள்ளிக் கொடுத்தது. அதற்குப் போட்டியாக சீனாவும். ஒப்பிடுகையில் நாம் எவ்வளவோ மேல். யாரிடமும் கையேந்தவில்லை. நாமே எமக்கானதை பெற்றுக் கொண்டோம். அந்த வகையில் நாம் பெருமை கொள்ளத்தான் வேண்டும்.

உண்மையில், வியட்நாமியர்களின் செயல் வீச்சு எவ்வளவு மூச்சாக இருந்தாலும், China, Soviet Union Laos, North Korea, Cuba, Czechoslovakia, Bulgaria, East Germany> Romania ஆகியநாடுகள் வெளிப்படையாகவே வியட்நாமுக்கு அனைத்து உதவிகளையும் செய்தது. பல நாடுகள் வியட்நாமின் அங்கீகாரத்துக்காக குரல் கொடுத்தார்கள், சிலநாடுகள் ஆயுத படைக்கலங்களையும், ஆலோசனைகளையும் தாராளமாக கொடுத்தார்கள். ஓரிரு நாடுகள் தமது படையையே அவர்களுக்கு உதவியாக அனுப்பி வைத்தார்கள். வியட்நாம் ஆசீர்வதிக்கப்பட்ட நாடாக மாறி முன்னேறிச் சென்றது. முன்னமே சொன்னது போல, கொம்மியுநிசம் காப்பாற்றி வளர்த்த செல்லக் குழந்தை இந்த வியட்நாம்.

இந்த இடத்தில் ஒரு விடயத்தை நாம் நினைவுக்கு கொண்டுவர கடமைப்பட்டுள்ளோம்.

**காத்திருங்கள் ...**

## கலைமகள் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா - 05.04.2016

➡ சேனையூர் நிருபர்

திருகோணமலை அன்புவழிபுரம் தி/கலைமகள் மகா வித்தியாலய பரிசளிப்பு விழா 05.04.2016 அன்று பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது. மகா வித்தியாலய அதிபர் க.ரவிதாஸ் அவர்கள் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் மற்றும் திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் என்.விஜேந்திரன் மற்றும் திருகோணமலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.செல்வநாயகம் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர். அத்துடன் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது மாணவர்களின் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அத்துடன் பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வருகை தந்திருந்த அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.








## நிகழ்வுகள்

### "நிலவே முகம்காட்டு" கவிதை நூல் வெளியீட்டு விழா

கலைமாறன் செ.லோகராஸாவின் நிலவே முகம் காட்டு என்னும் தலைப்பில் அமைந்த கவிதை நூல் வெளியீட்டு விழா சிறப்புற நடந்தேறியுள்ளது.


ஈச்சிலம்பற்று கோட்ட அதிபர்கள் சங்கத்தினர், வெருகலம்பதி சிறீ சித்திர வேலாயுதர் கல்வி மேம்பாட்டுச் சபை மற்றும் ஈச்சிலம்பற்று கோட்ட ஆசிரியர்கள் சங்கம் ஆகியன இணைந்து நடாத்திய இவ்வெளியீட்டு விழாவில் மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் உட்படக் கல்வியியலாளர்களும், மலைமுரசு பத்திரிகை-சிறீராம் அச்சக உரிமையாளரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளருமான "மாயன்" இரா.சிறீஞானேஸ்வரனும், கேணிப்பித்தன் ச. அருளானந்தம், சேனையூர் "இரத்தினா" இரத்தினசிங்கம் உட்படப் பல இலக்கியவாதிகளும் கலந்துகொண்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கியாள முடியாத மனதால் மனிதன் அடைவது...



பாதை மாறும் பருவத்தில்
காதல் மயக்கம் வரும் : அப்போது
பண்பு தவறிப் போமானால்
பாழாகும் பருவ வாழ்க்கை!

அலை பாயும் மனம் தாவும்
வானரமாகும் : மனதை
அடக்கியாளாமல் விட்டால்
அந்தோ வாழ்க்கை பரிதாபம்!

மதம் மாறும் மனமுடையோர்
மந்திக்கு சம மாகும் : மதிகெட்ட
மானிடர்கள் பெற்றெடுத்த
மாதாவை மாற்றலாமே?

தலை போக நேரட்டும் : மானம்
விலை போகலாமா? தமிழன்
நிலை குலையலாமா? மதம்
மாறுதல் சரி தானா?

அழியாத உணர்வோட்டம்
அகத்திலுதிக்கும் ஆருயிர்க்காதல்:
வழி மாறாது பயணித்தால் : தூய
வாழ்க்கையை அமைக்கும்!

கலா பூசணம். சிவஸ்ரீ அ.அரசரெத்தினம்
சேனையூர்

# இரண்டும்!!

-- தாமரைத்தீவான் --
[ஈச்சந்தீவு, கிண்ணியா]

நானும் தமிழும்
தேனும் பாலும்!
வானும் கடலுமா,
வாயும் நாவும்!

கலவாத் தேனும்
கறவைப்பாலும்,
நலந்தரு மென்றே
நான் நினைக்கின்றேன்!

இரண்டு மிருந்தால்,
ஏற்றலாம் மருந்தை!
இரண்டு மிலையேல்,
ஏறா மருந்தே!

அசதிக் கேற்ற,
அருமருந்தே தேன்!
வசதி படைத்தோர்,
வாழ்த்துவர் இரண்டும்!



# அனுபவித்துப்பார்




என்றாவது ஒரு நாள்
இளைய நிலாவில் – நீ
இனிமை கண்டதுண்டா
ஒருமுறை அனுபவித்துப்பார்
ஆயிரமாயிரம் அர்த்தங்களைக் காண்பாய்
உன்னுள்ளே
எத்தனை உணர்வுகள்
உறங்கிக் கிடக்கின்றதென்பதை
உணர்ந்து கொள்வாய்

தனிமையில் ஓர்நாள்
நட்டநிசி வரை வெட்ட வெளியில்
நிலாக்காலத்தில் விழித்திருந்து பார்
வானத்து நட்சத்திரங்களின் நடுவில்
வண்ண நிலா
எத்தனை அர்த்தங்களால்
உன்னை அழைக்கும்

இந்த சுகத்தை – நீ
என்றும், எதிலும்
கண்டிருக்கமாட்டாய்
நீயொரு கவிஞனாக
இல்லாதிருந்தால்
உன்னிடம் கவிதை பிறக்கும்
நீயொரு கலைஞனாக
இல்லாதிருந்தால்
கலை உன்னிடத்தில் பிறக்கும்.
உன் எண்ணத்தில்
ஏராளம்
உணர்வுகள் ரீங்காரமிடும்
அனுபவித்துப் பார்.
உன்னிடம் மனித நேயம் பிறக்கும்
நின்று வானைப் பார்

உன் எண்ணங்களுக்கு
இறக்கை முளைக்கும்
கற்பனைகளுக்குக் கால்கள் வளரும்
உன் கண்கள்
பல்லாயிரம் நட்சத்திரங்கள்
தோரணங்களாகக் காட்சிதரும்
அனுபவித்துப்பார்

'இத்திக்காய் காய் காயாதே'
என்று,
இந்த நிலாவை
பாடிய கவிஞனின்
காதலை அறிவாயா
அகிலத்தில்
இன்பமான எண்ணங்களின் ஊற்று
நிலாக்காலங்களில்தான்
தோன்றுமாம் அனுபவித்துப்பார்
இன்றைய நிலாவின்
அர்த்தத்தைப் புரிந்துகொள்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவெளிக் கிணையெதுமிலையே!

எங்கும் பயிர்வளம் பொங்கும் நிலவளம்
எங்கள் 'நிலாவெளி' ஊராம்!
தெங்குகள் வளர்ந்து முகிலுடன் உரசச்
செந்நெல் வயல்களில் சிரிக்கும்
பொங்கும் கடலலை இசைக்கும் அழகினைப்
புதுமை யென்றுலகமே இரசிக்கும்
வங்கக் கடலிடை மிதக்கும் "புறாமலை"
வனப்பைக் கண்டுளம் களிக்கும்!


பனைதரு நுங்கும் பாலெனும் கள்ளும்
பருகிட வருபவர் கோடி
மனமது மகிழக் கனவுகள் சுமந்தே
வருவார் மாந்தர்கள் நாடி
இனம் பல வாழும் இதமுடன் நாளும்
ஈங்கில்லை இனமத பேதம் . . !
வனந்தரு வளமும் வயல் நெடும் பரப்பும்
வரமென வாய்த்த நல்லூராம்!

அறுசுவைக் கரசாய் அணிசெயு முப்பும்
ஆற்றுமீன் இறாலொடு நண்டும்
உறைத்திடு மிளகாய் கத்தரி வெண்டி
உவப்பினைத் தரு வெங்காயம்
நிறைவுடன் பயிர்வகை குறைவற விளையும்
நிலாவெளி ஊர்க்கிணை உண்டோ!
உறைபவர்க் கிங்கு ஒரு குறையில்லை
உணர்ந்தவர்க்கிங்கு ஒரு குறையில்லை
உணர்ந்தவர்க் கிவ்வூர் சுவர்க்கம்

ஏசுவின் மறையும் ஈசனின் நெறியும்
இசுலாம் ஒனுமருள் வழியும்
மாசறப் பற்றி மாண்புடன் வாழும்
மக்களின் உறைவிடம் எமதூர்
பாசமாய்ப் பயிலப் பள்ளிகள் பற்பல
பாங்குடன் திகழ் நூலகமும்
தேசங்கள் போற்றும் வங்கிகள் சங்கம்
திகழும் மருத்துவ மனையும்

நீர் கொழும்போடு தென்திசை ஊர்சேர்
நீள் கடல் மீனவர் வருவர்
ஆர்த்தெழும் அலைமேல் அவர் படகோட்டி
அள்ளியே மீன்பல கொணர்வர்
ஊர் புகழ் பசுவின் பாலொடு பழமும்
உண்பவர் மனம் நிதம் மகிழும்
நீர்நிறை குளங்கள் நிறைந்திடும் அழகூர்
நிலாவெளிக் கிணையெது மிலையே!

அருட்பாவலர் நிலா தமிழின்தாசன்



# இலங்கையில் மீண்டும் தவறிழைக்கும் அமெரிக்கா

அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்ட அண்மைய இராஜதந்திரச் செயற்பாடுகள், சிறிலங்காவில் மனித உரிமைகளை மேம்படுத்துதல், பொறுப்புக்கூறல் மற்றும் போருக்குப் பின்னான சமூகத்தின் மத்தியில் மீளிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களைக்கேள்விக்குறியாக்கியுள்ளது.

இவ்வாறு The Diplomat ஊடகத்தில், Taylor Dibbert எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனைப் புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிசா பிஸ்வால், வோசிங்டனைத் தளமாகக் கொண்டியங்கும் பாதுகாப்புக்கான புதிய அமெரிக்க மையத்தில் கடந்த திங்களன்று உரையாற்றியிருந்தார்.

இதன்போது சிறிலங்காவில் அண்மைய வாரங்களில் ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்கள் தொடர்பாக நிசா பிஸ்வால் பாராட்டியுள்ளார். அமெரிக்காவின் பராக் ஒபாமா நிர்வாகத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரியான நிசா பிஸ்வாலின் சிறிலங்கா மீதான புகழாரமானது அமெரிக்காவின் உயர் அரசியல் அதிகாரிகளின் சிறிலங்கா மீதான அண்மைய பாராட்டுக்களுக்கான பிறிதொரு சான்றாகஉள்ளது.

"சிறிலங்காவில் இடம்பெற்றுள்ள கடந்த இரண்டு தேர்தல்களிலும் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதன் மூலமும் நாட்டை மீளிணக்கப்பாதை நோக்கிகொண்டு செல்வதன் மூலமும் இது சிறப்புக் கவனத்திற்கு உட்பட்டுள்ளது. சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள இத்தகைய முன்னேற்ற நிலையை வரவேற்ற நாடுகளில் அமெரிக்காவும் முன்னிலை வகிப்பதுடன் அமெரிக்காவானது சிறிலங்காவிற்கு தனது ஆதரவையும் உதவியையும் வழங்கவும் முன்வந்துள்ளது.

கடந்த ஆண்டு எமது நாட்டின் இராஜாங்கச் செயலரான கெரி மற்றும் அமெரிக்கத் தூதுவர் பவர் ஆகியோர் சிறிலங்காவிற்கான தமது பயணத்தை மேற்கொண்டிருந்தனர். 2015ல் நான் நான்கு தடவைகள் சிறிலங்காவிற்கு பயணம் செய்திருந்தேன். இந்த ஆண்டு நாங்கள் சிறிலங்காவுடனான முதலாவது கூட்டுப் பங்களிப்புக் கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளோம்" என நிசா பிஸ்வால் குறிப்பிட்டுள்ளார்.

இவர் மேலும் 'சிறிலங்காவானது தனது நாட்டில் நீதியை நிலைநாட்டுதல், அரசியல் உரிமைகளைப் பலப்படுத்துதல், நிலையான அமைதியை உருவாக்குதல் போன்றவற்றில் இன்னமும் பலவற்றைச் செய்ய வேண்டியுள்ள நிலையில், இந்த நாட்டு அரசாங்கமானது நாட்டை முன்னேற்றிச் செல்வதற்கானமுயற்சிகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்து வருகிறது. குறிப்பாக சிறிலங்காவின் புதிய அரசாங்கமானது ஏற்கனவே உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களிடம் அவர்களுக்குச் சொந்தமான 3400 ஏக்கர் நிலப்பரப்பை மீளவும் கையளித்துள்ளது. இதில் கடந்த வாரம் கையளிக்கப்பட்ட 177 ஏக்கர் நிலப்பரப்பும் உள்ளடங்குகிறது. சிறிலங்காவின் வடக்கு மற்றும் கிழக்கில் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான சில நிகழ்ச்சித் திட்டங்களை USAID ஆரம்பித்துள்ளதுடன் சிறிலங்காவின் பல புதிய மற்றும் கவர்ச்சிகரமான முதலீட்டு வாய்ப்புக்களை அமெரிக்காவின் வர்த்தக நிறுவனங்கள் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றன'"எனச்சுட்டிக்காட்டினார்.

சிறிலங்காவில் இன்னமும் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் உள்ளதாக பிஸ்வால் உறுதிபடத் தெரிவித்துள்ள அதேவேளையில், சிறிலங்கா மீதான ஒபாமா நிர்வாகத்தின் தொடர்ச்சியான நம்பிக்கையானது தவறாகப் பயன்படுத்தப்படுவது போல்தென்படுகிறது.

சிறிலங்கா அரசாங்கத்தின் பல புதிய மறுமலர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் முழுமையற்றதாகக் காணப்படுகிறது. நிலையான நீதி உட்பட மிகக் கடினமான விவகாரங்கள்தொடர்பாகசிறிலங்காவின்கூட்டு அரசாங்கமானது மிகத் தீவிர நடவடிக்கையை முன்னெடுக்கும் வரை அமெரிக்கா இராஜதந்திர ரீதியாக அழுத்தத்தை வழங்க வேண்டும். அத்துடன் இவ்வாறான விவகாரங்கள் தொடர்பில் சிறிலங்கா அரசாங்கமானது நிலையான தீர்வை எட்டாதவிடத்து அமெரிக்காவானது சிறிலங்காவுடன் ஆழமான பரஸ்பர உறவுகளைத்தொடரமாட்டாதுஎனவும் அமெரிக்காஅழுத்தம்கொடுக்கவேண்டும்.

கெட்டவாய்ப்பாக, கடந்த சில நாட்களாக சிறிலங்காவிலுள்ள அமெரிக்கத் தூதரகமானது அதிருப்தி தரும் நகர்வுகளை மேற்கொண்டு வருவதை நாம் அவதானித்துள்ளோம். சிலநாட்களின் முன்னர், சிறிலங்காவின் தலைநகரான கொழும்பில் அமெரிக்கக் கடற்படையானது சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து பாரியதொரு அணிவகுப்பை மேற்கொண்டிருந்தது. இந்த நிகழ்வை அமெரிக்கத் தூதரகமானது சமூக ஊடகங்களில் அதிகம் பிரபலப்படுத்தியது. இதேபோன்று திங்களன்று இது போன்ற பிறிதொரு சம்பவமும் இடம்பெற்றது.

சிறிலங்கா தொடர்பில் அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்ட அண்மைய இராஜதந்திரச் செயற்பாடுகள், சிறிலங்காவில் மனித உரிமைகளை மேம்படுத்துதல், பொறுப்புக்கூறல் மற்றும் போருக்குப் பின்னான சமூகத்தின் மத்தியில் மீளிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.




தமிழ் மக்களுக்கு எதிராக போர் மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான மீறல்கள் போன்ற பல்வேறு மீறல்களை சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டனர் என்பதை எவரும் மறந்து விடக்கூடாது. போர் முடிவடைந்ததன் பின்னரும் கூட, சிறிலங்கா இராணுவத்தினர் பல்வேறு மனித உரிமை மீறல்கள், பாலியல் மீறல்கள் மற்றும் சித்திரவதைகள் போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றன.

தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் சிறிலங்காவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போர் முடிவடைந்து ஏழு ஆண்டுகள் கடந்த நிலையிலும் சிறிலங்கா இராணுவத்தினர் மிகவும் அதிகளவில் பிரசன்னமாகியுள்ளமை நாட்டில் மேலும் மோசமானசூழலைஉருவாக்கியுள்ளது.

குறிப்பாக, கடந்த சில நாட்களாக அமெரிக்காவானது சிறிலங்கா அரசாங்கம் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்தினர் ஆகிய இரண்டு தரப்பினருக்கும் தவறான செய்தியை அனுப்புகிறது. இலங்கைத் தீவு மீதான எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாகத் திட்டமிடும் போது, அமெரிக்காஇதேதவறைஇரண்டுதடவைகள் செய்யமாட்டாது என நம்புகிறோம்.

சிறிலங்காவில் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் போன்றவற்றை மேம்படுத்தும் போது வோசிங்ரன் மேலும் உறுதியான நகர்வை முன்னெடுக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

# சம்பூர் அனல்மின் நிலைய திட்டம் நாட்டிற்கு ஆபத்தானது...

இந்தியா மற்றும் ஜப்பான் அரசாங்கங்களின் உதவியுடன் சம்பூரில் நிர்மாணிக்கப்படவிருக்கும் அனல் மின் நிலையம் அப்பிரதேசத்தில் வசிக்கும் தமிழ் மக்களுக்கு மாத்திரம் பிரச்சினையாக அமையப்போவதில்லை. இதனால் எமது முழு நாட்டினரும் எதிர்கால சந்ததியினரும் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்ளப்போகின்றனர் என எச்சரிக்கை விடுத்த புத்திஜீவிகள் இது குறித்து தேசிய ரீதியில் தெளிவூட்டும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வும் தெரிவித்தனர்.

**அத்துடன் இவ்விவகாரத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிராந்திய அரசியல் நலனுக்காக பார்க்காது அங்குள்ள மக்கள் மற்றும் அவர்களின் நலன் குறித்து சிந்திக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.**

சம்பூர் அனல் மின்நிலையம் நிர்மாணிக்கப்படுமாயின் அதனால் ஏற்படும் சூழலியல் மற்றும் சுகாதார, சமூக பிரச்சினைகள் குறித்து ஊடகவியலாளர்களை தெளிவூட்டும் செயலமர்வொன்று நாரஹேன்பிட்டியிலுள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபன கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய புத்திஜீவிகளே மேற்கண்டவாறு குறிப்பிட் டனர்.

கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கோபாலப்பிள்ளை அமிர்தலிங்கம், சிறுநீரகம் தொடர்பான நிபுணர் டாக்டர் நிலந்தி, சதமரி விஜேதுங்க, ஒடாரா குணவர்த்தன, ஹிரான் ஜயவர்த்தன, சூழலியல் ஆர்வலர் விதுர ரலபன்னவ, நீலா மரிக்கார், அசோக அபேகுணவர்தன மற்றும் டாக்டர் அனில் கப்ரால் ஆகியோர் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

அவர்கள் மேலும் விளக்கமளிக்கையில், சம்பூரில் முன்னெடுக்கப்படவிருக்கும் அனல் மின்நிலையத் திட்டமானது 200 வருடகால பழமைவாய்ந்ததாகும். இந்த திட்டம் நாட்டில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தும். இதனால் பல நாடுகள் இத்திட்டத்தை கைவிட்டுள்ளன. ஆனால் இந்த நவீன தொழில்நுட்ப உலகில் அனல்மின் நிலைய திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்கவிருப்பது வியப்புக்குரியதாகும். நாட்டில் மின்சாரத்திற்கான தேவைப்பாடுகள் அதிகமாக இருக்கின்றன. எவ்வித பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தாத நீர் மின் உற்பத்தி மற்றும் சூரியசக்தி மூலமாக மின் உற்பத்தியை ஊக்கப்படுத்தலாம். அதனை விடுத்து இவ்வாறானதொரு நாட்டுக்குப் பொருத்தமற்ற பேரழிவை ஏற்படுத்தும் அனல் மின் நிலைய திட்டத்தை முன்னெடுக்க அனுமதியளிக்க முடியாது.

இத்திட்டத்தினால் சுற்றாடலுக்கும் சுகாதாரத்திற்கும் வாழ்வாதாரத்திற்கும் பெரும் பாதிப்பு ஏற்படும். இப்பாதிப்புகளினால் சமூக பிரச்சினைகள் பல தோன்றும்.

### கொடூர யுத்தத்தால் இடப்பெயர்வு

இப்பகுதியில் நீண்டகாலமாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தமிழர்களின் குடிப் பரம்பலே இப்பகுதியில் காணப்படுகின்றது. எனினும் 2006 ஆம் ஆண்டுகளில் அரச படைகளுக்கும் புலிகளுக்கும் கொடூர யுத்தம் ஏற்பட்டது. கிழக்கை கைப்பற்றும் யுத்தம் இப்பகுதியிலேயே ஆரம்பமானது. இங்கு உக்கிர மோதல்கள் ஏற்பட்டமையினால் மக்கள் அங்கிருந்து இடம்பெயர நேரிட்டது. அங்கு மக்கள் எவரும் இல்லாத சூழ்நிலையிலேயே அரசு அந்நிலத்தை அனல் மின்நிலையத்திற்கு பயன்படுத்த திட்டமிட்டது. கடந்த அரசாங்கம் மக்களை அங்கு மீள்குடியமர்த்துவதில் அசமந்தப்போக்கை கடைப்பிடித்தது. எனினும் புதிய அரசாங்கம் சம்பூரில் மீள்குடியேற்றம் செய்கின்றது.

### சுற்றாடலுக்கு பாதிப்பு

சம்பூர் என்பது அனைத்து வளங்களையும் கொண்ட ஒரு அழகான பிரதேசமாகும். சுற்றுலா துறையினரை கவரக்கூடிய ஒரு பிரதேசமாகும். இந்த கிராமத்தின் பெயரின் அர்த்தம் சம்பூரணமானது. அதாவது அனைத்து வசதிகளையும் கொண்டது. இங்கு அனல் மின்நிலையம் அமைப்பதனால் அச்சூழல் அழிவுறும். அத்துடன் கடும் வெப்பமும் வரட்சியுமான நிலைமை ஏற்படும்.

### கடல் அசுத்தமாகும்

அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேறும் இரசாயன மற்றும் திண்மக் கழிவுகள் கடலுக்கு திருப்பிவிடப்படும். இதனால் கிழக்கு கடல் அசுத்தமடையும். மீன் இனங்கள் அழியும். அத்துடன் கிழக்கின் கடல் வளங்கள் அழிவடையும்.

### வளி மாசுறும்

அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேறும் காபனீரொட்சைட்டு, ஓகன் போன்ற வாயுக்களினால் வளி மாசுறும். இதனால் வடக்கு, வடமத்திய, வடமேல் மாகாண வான் பரப்பில் அமில வாயு அதிகரிக்கும்.

### விவசாயம் பாதிக்கும்

வளி மாசடைவு காரணமாக திருகோணமலை, அநுராதபுரம், பொலன்னறுவை, குருணாகல், வன்னி போன்ற பகுதிகளில் அமில மழை பொழியும் நிலைமை ஏற்படும். இதனால் அங்கு விவசாய நிலங்கள் பாதிப்படையும்.

### சுகாதார பிரச்சினைகள்

தற்போது அநுராதபுரம் மாவட்ட மக்கள் சிறுநீரக நோய் பாதிப்பினால் அவதியுறும் நிலையில் அமிலம், இரசாயன பதார்த்தங்கள் விவசாய செய்கை மற்றும் குடிநீர் என்பவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும். இந்நிலைமை மேலும் மோசமடையும். ஏற்கனவே நுரைச் சோலை மின்நிலையம் அமைக்கப்பட்ட தன் காரணமாக புத்தளம் பகுதியில் நிலத்தடி நீரை பயன்படுத்த நீர் வழங்கல் சபை தடைவிதித்துள்ளது. இந்நிலைமை கிண்ணியா, மூதூர், சம்பூர் பகுதிகளில் ஏற்படலாம்.

### திருமலை துறைமுகத்தை கட்டுப்படுத்தும் திட்டம்

உலகிலுள்ள விசேடமானதொரு துறைமுகமாக திருகோணமலை இயற்கை துறைமுகம் காணப்படுகின்றது. இதனை தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதற்கு நீண்ட காலமாக இந்தியா, சீனா போன்ற நாடுகளிடையே போட்டி நிலவி வருகின்றது. அந்த போட்டியின் விளைவாகவே அனல் மின்நிலைய திட்டத்தை சம்பூரில் முன்னெடுப்பதில் இந்தியாவும் சீனாவும் போட்டி போட்டுக்கொண்டிருக்கின்றன. இத்திட்டத்தை நிறைவேற்றுவதனூடாக திருகோணமலை துறை முகத்தை அவதானிப்பது அவர்களின் நோக்கமாகவும் இருக்கலாம்.

### இனப்பிரச்சினை தீர்வும் தேசத்தின் அழிவும்

இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வொன்றுக்கு இந்தியா முன்வந்துள்ளது. சம்பூர் அனல் மின்நிலைய திட்டத்தை முன்னெடுக்க இந்தியாவிற்கு இடமளிக்காவிடின் சீனா மூலமாக இத்திட்டம் முன்னெடுக்கப்படும். எனவே இந்தியாவிற்கு இடமளிப்பதற்கு கூட்டமைப்பு ஆதரவளிக்கிறது. அத்துடன் சம்பூர் பகுதிக்கு அண்மையில் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் இத்திட்டத்தை வேண்டாம் என மக்கள் தெரிவிப்பார்களேயானால் அதனை நான் அரசாங்கத்திடம் எடுத்துக்கூறுகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு இந்தியாவின் நலனுக்கான தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயற்படக்கூடாது. சம்பூருக்கும் நாட்டுக்கும் பேரழிவை ஏற்படுத்தும் இத்திட்டத்தை எதிர்க்கட்சி எதிர்க்க வேண்டும்.

- www.globaltamilnews.net -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் 99

## மாதரும் மன ஓர்மமும்



(வி.என்.சந்திரகாந்தி)

இன்று நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றியும் பாலியல் வல்லுறவுகள் குறித்தும் காவல்துறையாலும் பொதுமக்களாலும் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. தீர்ப்புகளும் மிகவும் காரசாரமாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. ஆனாலும் குற்றச்செயல்களோ குறைந்தபாடாக இல்லை! இதில் பாதிக்கப்பட்டவர்களாக ஐந்து வயது சிறுமி முதல் ஐம்பது வயதை கடந்த மெல்லியலாளர் வரை உள்ளோரை குறிப்பிடலாம். அதே சமயம் இந்த குற்ற செயல்களை புரிபவர்களாக பதின்ம வயது சிறுவர் முதல் இளைஞர்கள், நடுத்தர வயதினர், விவாகம் புரிந்தோர் முதியோர் என்று பட்டியல் நீண்டு கொண்டு போகின்றது.

நீதிமன்றங்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பாலியல் அத்துமீறல்கள் கொலைகள் ஆகியவற்றை புரிவோரை தடுப்பு காவலில் வைத்து விசாரிக்கின்றன. ஆயுள் தண்டனை என்றும் மரண தண்டனை என்றும் தீர்ப்புக்கள் வழுங்குகின்றனர். ஊடகங்கள் அதிலும் தொலைக்காட்சி, இணையம் போன்றன சம்பந்தப்பட்டவர்களின் படங்களையும் வீடியோக்களையும் ஒளிபரப்பி நாறடிக்கின்றன. இவற்றை பார்ப்பவர்களுக்கு நெஞ்சில் கிலி உண்டாக வேண்டும். ஆனால் அதுதான் கிடையாது...

மேலும் மேலும் சிறுமிகளையும் பாடசாலை மாணவிகளையும் இளம் யுவதிகளையும் கடத்திச்சென்று அவர்களை சீரழிப்பதும் கொலை செய்வதும் என்று குற்றச்செயல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அப்படியென்றால் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படும் சம்பவங்கள் அபூர்வமாகவும் தப்பித்துக்கொள்வோர் தொகை அதிகமாகவும் இருக்கின்றது என்று முடிவெடுக்க வேண்டியுள்ளதா? நாமும் எமது இச்சையை தீர்த்த பின்னர் ஏதோ ஒரு வழியில் தப்பித்துக் கொள்ள முடியாமலா போய்விடப்போகின்றது என்கின்ற நம்பிக்கைதான் பலரை மீண்டும் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுத்துகின்றது போலும்!

இந்த நிலையை போராட்ட காலத்துடன் சற்று உற்றுப்பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். பெண்கள் சுதந்திரமாக சுற்றித்திரிந்தார்கள். போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்டார்கள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய குணாம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் தமது பலத்தை மேம்படுத்திக் கொண்டார்கள். பிரச்சனைகளையும் ஆபத்துக்களையும் எதிர்கொள்ள தயாராக இருந்தார்கள். காதல், விவாகம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மேலான ஒரு கொள்கை மீது சுதந்திர வேட்கை மீது பற்றுக் கொண்டு களத்தில் இறங்கினார்கள். சக ஆண் போராளிகள் அவர்களை மதித்தது மட்டுமன்றி உறுதுணையாகவும் இருந்தார்கள். காமபசி கொண்டவர்கள் கூடஅச்சம் கொண்டவர்களாக பெண்களுக்கு உரிய மரியாதை அளித்தார்கள். தாம் மின்கம்பங்களில் கட்டப்பட்டு தண்டிக்கப்படலாம் என்ற அச்சம் காடையர்களுக்கு இருந்தது. அதனால் வல்லுறவு என்ற பேச்சுக்கே இடமிருக்கவில்லை!

இந்த நிலையை வெளிநாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் அங்கு ஆண் பெண் பாலாருக்கு திறந்த பாலியல் சுதந்திரம் காணப்படுவதொன்றே பாலியல் வல்லுறவு சம்பவங்கள் தவிர்க்கப்படுவதற்கு காரணமாக இருக்கின்றது. பாடசாலையில் படிக்கும் போதே மாணவ மாணவிகள கருத்தடை சாதனங்களை பயன்படுத்தவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றார்கள். ஒரு ஆணோ பெண்ணோ விவாகம் செய்யாமலே கணவன் மனைவியாக வாழ்ந்து பார்க்கிறார்கள். அந்த வாழ்க்கையில் திருப்தி இல்லாவிட்டால் தெரிந்தெடுத்த துணைவியை கைகழுவிவிட்டு புதிய துணையை தேடிக்கொள்ள முடியும்.

இன்னும் சொல்லப்போனால் ஏழ்மை காரணமாக பல பெண்கள் தாமாகவே இரவில் தெருவிற்கு வந்து தம்மை விற்கின்றார்கள். மலேசியா, சிங்கப்பூர் போன்ற அதி நாகரீக வளர்ச்சி கண்ட நாடுகளில் பெண்கள் காட்சி அறைகளில் வாடிக்கையாளர்களுக்காக காத்திருக்கின்றார்கள். "நான் அழகானவள். என்னிடம் வாருங்கள்" என்று சந்தைப் பொருள்களை கூவி விற்பது போல தம்மை விற்கின்றார்கள். அங்கெல்லாம் வல்லுறவை அடுத்த கோணத்தில்தான் நோக்க வேண்டியுள்ளது!

இந்திய தமிழ் சினிமா படங்களை அவதானித்தால் ஒரு உண்மையை புரிந்துகொள்ள முடியும். அப்படங்களில் கதாநாயகன் ஒரு பெண்ணை காதலிப்பான்: வில்லன் அவளை அடைய முயற்சிப்பான். இதுவே பிரதான கதையோட்டமாக இருக்கும். அல்லாமல் எந்த இளைஞனாவது பெண்களை கடத்திச்சென்று பாலியல் வல்லுறவில் ஈடுபடுவது போன்று கதைகள் அமைவதில்லை. அதற்கு காரணம் அங்கு பாலியல் காரணங்களுக்காக பெண்களை அடைந்து கொள்வதில் சிரமம் எதுவும் இல்லை! பணம் மட்டும் இருந்தால் போதுமானது.

இலங்கையை எடுத்துக்கொண்டால் தலைநகரிலும் வேறு பிரதேசங்களிலும் 'மஸாச்' நிலையங்கள் அமைந்துள்ளன. இவற்றில் கிராமப்புற இளம் பெண்களும் வெளிநாட்டு பெண்களும் பணிபுரிகின்றார்கள். இந்த நிலையங்கள் தாம் அமைக்கப்பட்ட நோக்கத்திற்கு அப்பாலும் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதால் பல நேரங்களில் காவல்துறையினரின் சுற்றிவளைப்பிற்கு உட்படுகின்றன. அதற்கு அப்பால் சுற்றுலா பயணிகள் நலனை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள பல விடுதிகள் விவாகமாகாத பல இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் உயர்ந்த வாடகையில் அறைகளை வழுங்குகின்றன. யுத்த பாதிப்புக்குள்ளான கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் மிகுந்த செல்வாக்குடன் அமைக்கப்பட்டுள்ள விடுதிகளில் சிங்கள பெண்களும் தமிழ் பெண்களும் பணி நிமித்தம் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் செய்யும் சேவைக்கு ஏற்ப நாட்சம்பளங்களும் குறித்தொதுக்கப்பட்டுள்ளன.

எப்படிப்பார்த்தாலும் இலங்கையை பொறுத்தவரை பாலியல் வல்லுறவுகளை தடுப்பதற்கு சட்டம், ஒழுங்கு, தண்டனை ஆகியவற்றிற்கு அப்பால் மேலே விபரிக்கப்பட்ட காரணிகளும் கூட கைகொடுக்கவில்லை. ஒரு வேளை அந்த இடங்கள் அதிக பணசெலவை உண்டுபண்ணுவதாக இருக்கலாம் என்று எண்ணுவதற்கும் இடமில்லை. அண்மையில் சுவிஸில் இருந்து விடுமுறையில் வந்த ஒரு நபர் பாலியல் வல்லுறவு சம்பவத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் நினைத்திருந்தால் பணத்தை தூக்கியெறிந்து இன்பம் துய்த்திருக்கலாம். விடுமுறை முடிவில் சுவிஸிற்கும் திரும்பியிருக்கலாம். அவர் அப்படி செய்யவில்லை. இங்குதான் போதைவஸ்து எப்படி பெண்களுக்கெ-திரான வன்முறைகளுக்கு துாபமிடு-கின்றதென சிந்திக்க வேண்டியுள்ளது.



எமது கலாச்சாரம் ஒரு வகையில் இளைஞர்களை கெடுத்து வைத்திருக்கின்றது. ஒரு நிகழ்ச்சியில்" ... வைபவத்தில் சிறிதளவு மது அருந்தமாட்-டார்கள். ஆனால் மறைவில் போத்தல்களை காலி செய்துவிடு-வார்கள். அதே போன்று விபச்சார விடுதிகளுக்கு போவது பெரும் அவமானம் என கருதும் இளைஞர்கள் எவருக்கும் தெரியவாராது என்ற நம்பிக்கையில் நண்பர்களுடன் இணைந்து பாலியல் வல்லுறவு புரிவதற்கு முன்வருவர். தம்மை காட்டிக்கொடுக்க மாட்டார் என்று எவர் மீது நம்பிக்கை வைக்கிறார்களோ அவர்களாலேயே தாம் காட்டிக்கொடுக்கப்படப் போவதை அவர் அறிந்திலர்!

டெல்லியில் இரவு நேர பயணத்தின்போது ஒரு மாணவி மேல் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவில் பலர் சம்மந்தப்பட்டனர். அதே சமயம் ஒரு பதின்ம வயது சிறுவனும் அச்சம்பவத்துடன் தொடர்பு கொண்டுள்ளான். பல குற்றச்செயல்கள் சம்பவிக்கும் போது அவை எவருக்கும் தெரியவராது என்ற நம்பிக்கையில் தான் நடந்தேறுகின்றன. ஆனால் இறைவனின் நியதி எந்த ஒரு குற்றவாளியும் ஏதோ ஒரு தடயத்தை விட்டே செல்கின்றான். மேற் குறிப்பிட்ட சம்பவத்தில் தொடர்புபட்ட அனைவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. சிறுவனின் வயதை கருத்தில் கொண்டு அவனுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது.

எந்த ஒரு பெற்றோரும் தமது பிள்ளைகளை தவறாக வழி காட்டமாட்டார். ஒவ்வொரு தந்தையும் தம் ஆண் பிள்ளைகளுக்கு பிற பெண்பிள்ளைகளுடன் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றி கட்டாயமாகவே எடுத்துரைக்கவே செய்திருப்பார். அன்னை அதற்கும் மேலாக புத்திமதிகளை உரைத்திருப்பார்

எமது சமயம் காமத்தை எப்படி கட்டுப்படுத்துவது என்பது பற்றி கற்றுத்தந்துள்ளது. உப்பு, காரம், புளி போன்றவை காம ஆசையை தூண்டுவன. அவற்றை தவிர்க்க வேண்டும். யோகா எமது உடலை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அதிக துணை புரிகின்றது. தியானம் எமது மனதை கட்டுப்படுத்துகின்றது. முனிவர்களும், ரிஷிகளும் பிரமச்சரியத்தை காத்து எமக்கு முன்னுதாரணமாக திகழ்கின்றாாகள்.

எமது நாட்டில் இன்று நடைமுறையில் உள்ள சட்டம், ஒழுங்கு தண்டனைகளால் பாலியல் வல்லுறவுகள் குறைவடையவில்லை. அதே போன்று பாலியல் சுதந்திரம், கட்டுப்பாடான கலாச்சாரம், மத பிரச்சாரம் ஆகியவை கூட பெண்கள் மீதான வன்முறையை முடிவுக்கு கொண்டுவரவில்லை.

சொல்லப்போனால் சில சம்பவங்களை நோக்கும்போது பெண்கள், கடவுளது ஆதரவும் இன்றி அநாதரவான நிலையில் உள்ளார்கள் என்றே கருத வேண்டியுள்ளது. இந்நிலையில் யுத்தம் இன்று முடிவடைந்-தாலும். யுத்தகால போராளிகளின் மன ஓர்மத்துடனும் ஐக்கியத்துடனும் பெண்கள் சமூகத்தை எதிர்கொள்வ-தொன்றே அவர்கள் மீதான வன்முறைகளுக்கு தீர்வாக அமையும்!

# விநோதங்கள்

## திருமணம் முடிக்கவிருக்கும் வித்தியாசமான தம்பதிகள்

அமெரிக்காவை சேர்ந்த Kim என்ற 51 வயது பெண்மணி 30 வருடங்களுக்கு முன்னர் தனக்கு பிறந்த Ben என்ற மகனை சிறுவயதிலேயே வேறு ஒருவருக்கு தத்து கொடுத்துள்ளார்.



தற்போது 32 வயதை எட்டியுள்ள Ben விக்டோரியா என்ற பெண்ணை திருமணம் செய்துகொண்டு வாழ்ந்து வந்துள்ளார். இந்நிலையில், இரண்டு வருடங்களுக்கு முன்னர் Kim தனது மகனை சந்தித்தவுடன், அவர்களிடையே ஒரு இனம்புரியாத அன்பு வந்துவிடவே இருவரும் நெருங்கிப்பழக ஆரம்பித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து Ben தனது மனைவியிடம், எனது தாயாருக்காக நான் உன்னை விட்டு செல்கிறேன் என்று கூறி குடிபெயர்ந்து சென்றுள்ளார். இந்நிலையில், ஒருவரையொருவர் ஆத்மார்த்தமாக காதலிக்கும் இவர்கள் தற்போது திருமணம் செய்து கொண்டு குழந்தை பெற்றுக் கொள்ளவும் தயாராக உள்ளனராம்.

## வருமானம் போதாமையால் மனைவியுடன் வாழ முடியாது



அமெரிச்காவை சேர்ந்த கேட்டியும் (40) பிரித்தானியாவை சேர்ந்த டோமினிக்(42) என்பவரும் கடந்த 2005ம் ஆண்டில் இணையத்தளம் மூலம் சந்தித்து காதலித்து திருமணமும் முடித்த பிறகு பிரித்தானிய நாட்டில் தற்காலிக விசாவில் கேட்டி ஜேம்ஸ் குடியேறியுள்ளனர். இந்நிலையில் விசாவை புதுப்பிக்க விண்ணப்பம் செய்தபோது, பிரித்தானிய சட்டப்படி, அந்நாட்டு குடிமகன் வெளிநாட்டு பெண்ணை திருமணம் செய்தால், அவருக்கு சராசரியாக ஆண்டு வருமானம் 18,600 பவுண்ட்டும், குழந்தையுடன் குடும்பம் நடத்த வேண்டும் என்றால், 22,400 பவுண்ட் வருமானமும் இருக்க வேண்டும். ஆனால், டொமினிக்கிற்கு இதைவிட குறைவாகவே வருமானம் வருவதால், அவரது மனைவி பிரித்தானியாவில் தங்க முடியாது என குடியமர்வு அதிகாரிகள் உறுதிப்பட தெரிவித்துள்ளனர்.

## 9 ஆண்டுகளாக திருமணம் நடக்காத கிராமம்

துருக்கியில் தென்பகுதியில் அமைந்துள்ளது யுஸம்லூ கிராமத்தை சேர்ந்த பெண்களில் பலரும் கிராமத்தில் வசிக்க விரும்பாததால் அருகில் உள்ள இஸ்தால்புல், அங்கரா, அண்டால்யா போன்று நகரங்களுக்கு சென்று திருமணம் செய்து கொள்கின்றனர். இதன் காரணமாக இந்த கிராமத்தில் திருமணம் நடைபெற்று 9 ஆண்டுகள் ஆகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்களின் இத்தகைய போக்குக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக 25 முதல் 45 வயது வரையுள்ள திருமணமாகாத 25க்கும் ஏற்பட்ட ஆண்கள் பேரணி மேற்கொண்டனர்.



மக்கள் தொகை முன்னர் 400 ஆக இருந்தது. ஆனால் தற்போதோ 233 பேர் மட்டுமே வசிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## விமர்சனம்

### ஹலோ நான் பேய் பேசுறேன்


நடிகர்: வைபவ்
நடிகை: ஐஸ்வர்யா ராஜேஷ்
இசை: சித்தார்த் விபின்
ஒளிப்பதிவு: எஸ்.பாலமுருகன்
இயக்குனர்: பாஸ்கர்

அடுத்த வார இதழில்



## திரை விமர்சனம் "புகழ்"

நடிகர் - ஜெய்
நடிகை - சுரபி
இசை - விவேக் சிவா, மெர்வின் சாலமன்
இயக்கம் - மணிமாறன்
ஒளிப்பதிவு - வேல்ரா



ஊரில் நடக்கும் சின்னச் சின்னத் தவறுகளை தட்டிக் கேட்கும் நேர்மையாளர் ஜெய்க்கும், அதே ஊரில் அரசியல் வாதியாக இருக்கும் மாரிமுத்துவுக்குமிடையே அடிக்கடி தகராறு ஏற்படுகிறது. அமைச்சர் ஒருவருக்காக அந்த ஊரிலிருக்கும் புறம்போக்கு விளையாட்டு மைதானம் ஒன்றை தன் வசப்படுத்த முயல்கிறார் மாரிமுத்து. அதற்குத் தடையாக குறுக்கே நிற்கிறார் ஜெய். ஜெய்யை மறைமுகமாக வீழ்த்துவதற்காக அவரின் நண்பன் ஒருவரை கவுன்சிலராக்குகிறார் மாரிமுத்து. அவரை வைத்து கொஞ்சம் கொஞ்சமாக காய் நகர்த்த, அப்போதும் விடாப்பிடியாக மல்லுக்கு நிற்கிறார் ஜெய். இறுதியில் மைதானத்தை யார் கைப் பற்றியது என்பதே புகழ் படத்தின் கதைக்களம்.

தன்னால் முடிந்தளவுக்கு படத்தை நகர்த்த முயன்றிருக்கிறார் ஜெய். ஹீரோயின் சுரபி இப்படத்தில் ரொம்பவே மெலிந்து பார்க்க பரிதாபமாக காட்சியளிக்கிறார். ஆனாலும் நடிப்பில் ஸ்கோர் செய்திருக்கிறார். வில்லன் மாரிமுத்துவுக்கு, அவரின் கேரியரில் படம் முழுக்க வரும்படியான கேரக்டர் இப்படத்தில் அமைந்திருக்கிறது. ஆர்.ஜே.பாலாஜியால் ரசிகர்களை சிரிக்க வைக்க முடியவில்லை. கோபக்கார அண்ணனாக கருணாஸ் கைதட்டல் வாங்குகிறார். கவிஞர் பிறைசூடன் முக்கிய கதாபாத்திரம் ஒன்றில் ரசிகர்களை நெகிழ வைத்திருக்கிறார்.

தமிழ்சினிமா காலம்காலமாக பார்த்து கொண்டிருக்கும் கதை. கதைதான் அரதப்பழசென்றால், திரைக்கதை அமைப்பதிலும், சுவாரஸ்யமான காட்சிகளை உருவாக்குவதிலும்கூட இன்னும் அந்தக்காலத்திலேயே இருக்கிறார் இயக்குனர் மணிமாறன். ஆக்'ன் காட்சிகளும் சில வசனங்களும் மட்டுமே படத்திற்கு பலம் சேர்த்துள்ளது.

**மொத்தத்தில் படத்திற்கு புகழ் கிடைப்பது கஷ்டமே**

## திருமண கோலத்தில் வைரலாகும் தனுஷின் புகைப்படம்

நடிகர் தனுஷ் தற்போது அரை டஜன் படங்களில் நடித்து வருகிறார்.இந்நிலையில் இன்று திடிரென்று தனு' திருமண கோலத்தில் உள்ளது போல் ஒரு புகைப்படம் பரவி வருகிறது. அந்த புகைப்படத்தில் தனு' மேக்ஹா ஆகாடன் உள்ளார்.இந்த புகைப்படத்தில் ரசிகர்கள் குழப்பமடைய அதன் பிறகு தனுஷ் நடித்து வரும் கௌதம் மேனம் இயக்கும் என்னை நோக்கி பாயும் தோட்டா படத்தின் காட்சி தான் இந்த புகைப்படம் என்று தெரியவந்துள்ளது.

## அஜித் சொன்ன அதிரடி பதில் இது தான்

அஜித் எப்போதும் தன் படத்தின் ப்ரோமோ'ன் நிகழ்ச்சியில் கூட கலந்துக்கொள்ள மாட்டார். ஆனாலும் இவர் படங்களின் வசூலுக்கு எந்த பாதிப்பு வரப்போவதில்லை.இதை தெளிவாக தெரிந்துக்கொண்டு தான் இப்படியெல்லாம் செய்து வருகிறார் என பலரும் கூறுகின்றனர்.ஆனால், அஜித் சில வருடங்களுக்கு முன் நீங்கள் ஏன் எந்த பொது நிகழ்ச்சியிலும் கலந்துக்கொள்வது இல்லை என கேட்க, நாம் வளரும் போது காதுகளை மூடிக்கொள்ள வேண்டும், வளர்ந்த பிறகு வாயை மூடிக்கொள்ள வேண்டும். என கூறியுள்ளார். அவர் என்ன நினைத்து சொன்னாரோ, அதில் உள்ள ஆழமான தத்துவம் தற்போது பலருக்கும் புரிந்திருக்கும்.

## அசின் ரசிகர்களுக்கு ஒரு அதிர்ச்சி செய்தி

போக்கிரி, வரலாறு, தசவதாரம் ஆகிய படங்களில் நடித்த தமிழ் சினிமா ரசிகர்களை கவர்ந்தவர் அசின். இவர் பிரபல மொபைல் நிறுவன உரிமையாளர் ராகுல் சர்மாவை திருமணம் செய்துக்கொண்டது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் இவர் மீண்டும் நடிக்க விருப்பப்படுவதாகவும், இதற்கு ராகுல் அனுமதி கொடுக்கவில்லை என்று ஒரு செய்தி பரவி வந்தது.இதுக்குறித்து அசின் நான் இனி எந்த படங்களிலும் நடிக்க மாட்டேன், விளம்பர படத்தில் கூட நடிக்க மாட்டேன், மேலும், நீங்களாகவே வீண் வதந்திகளை பரப்ப வேண்டாம் என கூறியுள்ளார்.

## முன்னணி ஹீரொவின் படத்தில் வடிவேலு

வடிவேலு எப்போது மீண்டும் பழைய காமெடியனாக வருவார் என்பது பலரின் எதிர்ப்பார்ப்பு. ஆனால், அவர் அதை புரிந்துக்கொள்ளாமல் ஹீரோவாக தான் நடிப்பேன் என நடித்து ரசிகர்களை வெறுப்பேற்றினார்.இந்நிலையில் மீண்டும் காமெடியனாக சுராஜ் இயக்கும் படத்தில் கமிட் ஆகியுள்ளார். இப்படத்தில் ஹீரோவாக விஷால் நடிக்கவுள்ளார்.மேலும், இப்படத்தின் ஹீரோயின் தேடல் தற்போது நடந்து வருகிறதாம். வடிவேலு கடைசியாக நடித்த முன்னணி நடிகர் என்று பார்த்தால் 2011ம் ஆண்டு விஜய் நடித்த காவலன் படத்தில் காமெடியனாக நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பிறகு மறுபடியும் ஒரு காதல் என பெரிதும் அறியாத நடிகர்கள் படத்தில் நடித்திருந்தார்.

## நான் ஈ இரண்டாம் பாகத்தில் நடிக்கும் முன்னணி நடிகர்

ராஜமௌலி இயக்கத்தில் வெளிவந்து மாபெரும் வெற்றி பெற்ற படம் நான் ஈ. இப்படத்தின் இரண்டாம் பாகம் குறித்து எழுத்தாளர் விஜயேந்திரா பிரசாத் மனம் திறந்துள்ளார்.இவர் கூறுகையில் நான் ஈ பாலிவுட் நடிகர் சல்மான் கானுக்கு மிகவும் பிடித்தது, அதனால், இப்படத்தின் இரண்டாம் பாகத்தில் தான் நடிப்பதாக கூறியுள்ளார்.ஆனால், இப்படம் எப்போது தொடங்கும், யார் தயாரிப்பாளர் என்பது ஏதும் முடிவாகவில்லை என தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## ஒளி ஊடுபுகவிடக்கூடிய மரப் பலகை உருவாக்கம்

தளபாட உற்பத்திகளில் அதிகளவில் பயன்படுத்தப்படும் மரப் பலகைகள் ஒளியினை ஊடுபுக விடமாட்டாது என்பது அனைவரும் அறிந்த விடயமே. ஆனால் அதனையும் சாத்தியப்படுத்தும் வகையில் ஒளியை ஊடுபுகவிடக்கூடிய கண்ணாடி போன்ற மரப் பலகையினை சுவீடன் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இப் பலகையானது இயற்கையானத மரத்திலுள்ள கலங்களின் கலச் சுவர்களில் காணப்படும் முதலாவது படை இலிக்னில் தயாரிக்கப்பட்டுள்ளது. மிகவும் பாரம் குறைந்ததாகவும், உறுதித் தன்மை மிகுந்ததாகவும் காணப்படும் இந்த ஒளி ஊடுபுகவிடும் பலகையினை தளபாடங்கள், வீட்டு ஜன்னல்கள் என்பவற்றினை வடிவமைப்பதற்கு மட்டுமன்றி சோலார் கலங்களை தயாரிக்கவும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும் என விஞ்ஞானிகள் குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.




OTHER

## பாதிக்கப்பட்ட முள்ளந்தண்டு வடங்களை சீர் செய்யும் ஸ்டெம் செல்ஸ்

சம கால மருத்து தொழில்நுட்பத்தில் ஸ்டெம் செல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன. காரணம் உயிரினங்களில் பாதிக்கப்பட்ட பாகங்களை இலகுவாக புதுப்பிப்பதற்கு இவை உதவுவதாலாகும். அத்துடன் ஸ்டெல் செல்களின் உதவியுடன் ஆய்வுகூடத்தில் செயற்கை முறையில் இதயத்தினை விஞ்ஞானிகள் வளர்த்துவருகின்றமை கூட தெரிந்ததே. தற்போது பாதிப்படைந்த முள்ளந்தண்டு வடங்களை மீளவும் வளர்ச்சியடையச் செய்யும் நுட்பத்தினை உருவாக்கி கலிபோர்னிய பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர். இம்முறைமையானது முதன் முதலில் எலிகளில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது. இப் பரிசோதனை வெற்றியளிப்பின் மனிதர்களில் மட்டுமன்றி ஏனைய விலங்குகளிலும் பாதிக்கப்பட்ட முள்ளந்தண்டு வடத்திற்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க முடியும் என குறித்த விஞ்ஞானிகள் குழுவில் இடம்பெற்றிருந்த "Mark Tuszynski" என்பவர் தெரிவித்துள்ளார்.




## வாடிக்கையாளர்களுக்கு மேலும் ஒரு புதிய வசதியை அளிக்கும் வாட்ஸ் அப்

மெசேஜ் ஆப்ஸில் முதலிடத்தில் உள்ள வாட்ஸ் அப் மென்பொருள் தனது வாடிக்கையாளர்களுக்கு பயனுள்ள புதிய வசதியை அளித்துள்ளது. உலகளவில் அதிக மக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் வாட்ஸ் அப் மென்பொருள் தனது வாடிக்கையாளர்களுக்கு தேவையான புதுமைகளை அவ்வப்போது புகுத்தி வந்தது. வாட்ஸ் அப் குரூப் சாட்டில் 100 நபர்கள் மட்டுமே இருக்க முடியும் என்ற எண்ணிக்கையை 256ஆக உயர்த்தியது.

இதுபோல் பல மாற்றங்களை செய்து வந்தது. இந்நிலையில் தற்போது மறையாக்கம்(Encryption) வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் நாம் ஒருவருக்கு அனுப்பும் தகவல், புகைப்படம், வீடியோ என எதுவானாலும் மறையாக்கம் செய்யப்பட்டே பகிரப்படும்.

இதன் மூலம் நாம் மற்றவர்களுக்கு அனுப்பப்படும் தகவல்களை யாரும் இடை மறித்து ஹேக் செய்ய முடியாது.

எனினும் இந்த வசதியை பெற வாட்ஸ் அப்பை அப்டேட் செய்திருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.




## Face Book இன் கண்டுபிடிப்பு

எழுத்து வடிவத்தை மையப்படுத்தியதாக இருந்த இணையப் பக்கங்கள் இப்போது அதிகளவில் படங்களை மையப்படுத்தியே வருகின்றன. ட்விட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் பேஸ்புக் போன்ற சமுக வலைதளங்களில் நாளாந்தம் அண்ணளவாக 1.8 பில்லியன் படங்கள் பதிவேற்றப்படுகின்றன. பேஸ்புக்கில் பதிவேற்றப்படும் படங்களில் என்ன உள்ளது என்பதை பார்வைத்திறன் இல்லாதவர்களுக்கு எடுத்துக் கூறி, அதனை விளங்கப்படுத்தும் முறை ஒன்றை பேஸ்புக் அறிமுகப்படுத்தியுள்ளது. எழுத்து வடிவிலான தரவுகளை ஒலிவடிவில் வெளியிடும் ஸ்கிரீ ரீடர்ஸ் என்று அழைக்கப்படும் அதிநவீன மென்பொருள் ஒன்றை கண்பார்வையில்லாதோர் பாவித்து வந்தனர். எவ்வாறாயினும் அந்த மென்பொருளால் படங்களை வாசிக்க முடியாது என்ற குறைபாடு இருந்து வந்தது. பொறியியலாளர் மாட் கிங் கட்புலன் அற்றவர்





Image copyrightfacebook

அந்த குறைபாட்டினையும் நீக்கி கண்பார்வையற்றோருக்கும் அதிக பயனை வழங்கும் வகையில் பேஸ்புக்கின் புதிய படைப்பு வெளிவந்துள்ளது. "படத்தில் உள்ளவற்றை கேட்டு, படத்தை கற்பனையில் பார்க்க முடிகிறது" என இதன்மூலம் பயனடைந்தவர்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். பேஸ்புக்கில் பதிவேற்றப்படும் படங்கள் ஆர்டிபிஷல் இன்டலிஜன்ஸ் மூலம், பயனாளிக்கு ஒலி வடிவில் விளங்கப்படுத்தப்படுகிறது. இந்த புதிய கண்டுபிடிப்பை பேஸ்புக்கின் பொறியியலாளர் மாட் கிங் உருவாக்கியுள்ளார். மாட் கிங் பார்வைத்திறன் அற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.


## தாகத்தை மட்டுமல்ல பசியையும் போக்கக்கூடிய போத்தல் உருவாக்கம்

ஆண்டு தோறும் பல மில்லியன் தொன் பிளாஸ்டிக் பொருட்கள் உலகெங்கிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை பாவனைக்கு உதவாததாக மாறும்போது இயற்கைக்கு பெரிதும் சவாலாக விளங்குவதனால் பிளாஸ்டிக்குக்கு பதிலாக மாற்று திரவியத்தினை கண்டுபிடிக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுவருகின்றனர். இதேவேளை சில பொருட்கள் மாற்று திரவியங்களால் உருவாக்கப்பட்டும் உள்ளன. இவற்றின் தொடர்ச்சியாக பாசியினை அடிப்படையாகக் கொண்டு நீர் போத்தல் (Water Bottle) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மக்கக்கூடிய தன்மையை உடைய இப் போத்திலானது நீர் உள்ள சமயம் பெரிதாகவும், நீர் அற்ற சமயங்களில் சுருங்கியதாகவும் மாறக்கூடியது. தவிர, இப் போத்தலை பாவித்து முடித்ததும் உணவாக உட்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அன்ரோயிட் மாஸ்மலோ இயங்குதள பாவனையில் வீழ்ச்சி

இன்றைய காலகட்டத்தில் மொபைல் சாதனங்களில் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வரும் இயங்குதளங்களில் கூகுளின் அன்ரோயிட் இயங்குதளமும் ஒன்றாகும். இவ் இயங்குதளத்தில் பல பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் சில மாதங்களுக்கு முன்னர் அதன் புதிய பதிப்பான Android Marshmallow அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. எனினும் பயனர்கள் மத்தியில் பெரிதளவில் வரவேற்பைப் பெற்றிராத இவ் இயங்குதளம் 4.6 சதவீதமான சாதனங்களில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கிடையில் Android Lollipop பதிப்பானது 35.8 சதவீத சாதனங்களில் பயன்படுத்தப்பட்டு முன்னணியில் இருப்பதுடன், முறைவமுயவ ஆனது 33.4 சதவீதங்களுடன் இரண்டாவது நிலையில் உள்ளது. இவற்றிற்கு அடுத்தபடியாக Jelly Bean, Ice Cream Sandwich, Gingerbread, Froyo என்பன காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரணமானவனின் மனது

கடந்தவார தொடர்ச்சி ...

அவள் பின் இருக்கையில் இருந்தபடியே அவரை இயக்குகிறாள். "வலது பக்கத்தில், இரண்டாவது பட்டன்" நண்பர் அமத்துகிறார்.

"கெட்டிக்காரன்" என்றாள் நோர்வேஜிய மொழியில். நண்பரின் முகம் பூரிக்கிறது.

"இனி புளூடுத் பட்டனை அமத்து"

நண்பர் தடுமாறுகிறார்

"கண்ணுக்கு முன்னே இருக்கிதே தெரியலியா"

நண்பர் .. "ஓம் என்ன"... என்றபடியே அமத்துகிறார்.

"இனி சேர்ச் என்பதை அமத்து"

நண்பர் முழுசுகிறார்.

"ஓஓஓ அப்பா! உனக்கும் எலக்ரொனிக்கும் சம்பந்தமே இல்லை" என்றபடியே பின்னிருக்கையில் இருந்து முன்னே வந்து ஒரு பட்டனை அமத்தினாள். திரையில் அவளின் தொலைபேசியின் பெயர் தெரிகிறது.

பெயரை அமத்துடா... என்கிறாள் செல்லமாக, நண்பர் கடைக்கண்ணால் என்னுடன் பேசியபடியே அமத்துகிறார்.

திடீர் என்று எனது வாகனத்தில் இல்லாத ஒரு குத்துப்பாட்டு பாடத் தொடங்கியது.



கண்ணாடியினூடாக அவளைப் பார்த்தேன். என்ன பார்க்கிறாய் என்பது போல பெருமிதத்துடன் என்னைப் பார்த்தாள். "சஞ்சயன் மாமா! சத்தத்தை அதிகமாக வை" என்று கட்டளையிட்டாள்.

முடிந்தளவுக்கு திருகினேன். ஒலிபெருக்கி அதிர்ந்து கத்தியது. நண்பர் காதுகளை கைகளால் பொத்திக்கொண்டார்.

அவளோ, பின்னிருக்கையில் இருந்தபடியே தலையை ஆட்டியபடியே தாளம் போட்டுக்கொண்டிருந்தாள்" நண்பர் என்னைப் பார்த்து கண்ணைச் சுருக்கினார். நான் அதை காணாததுபோல் இருந்தேன்.

நண்பர் சத்தத்தை குறைத்தார்.

"சஞ்சயன் மாமா, பாட்டை ரசிக்கிறார். அவரைக் கேட்காமல் சத்தத்தை குறைக்கிறாயே ... உனக்கு பழக்கவழக்கம் தெரியாது" என்றாள் அவள்.

நண்பர் என்னை பரிதாபமாகப் பார்த்தார். நான் எனக்கு பிடிக்காத ஒரு குத்துப்பாட்டுக்கு தலையாட்டிக் கொண்டிருந்தேன்.

## சஞ்சயன் செல்வமாணிக்கம்

# பெண்களைப் பெற்றோர் பாக்கியசாலிகள்

நண்பர் ஒலிபெருக்கியின் சத்தத்தை அதிகமாக்கினார். "அது" என்பதுபோல் அவள் நண்பரைப் பார்த்தார்.

வாகனம் வேகமான பாதையில் சென்று கொண்டிருந்தது.

பாட்டுகள் மாறின. இசை மாறியது, துள்ளல் இசை ஆரம்பித்தது.

என்னையறியாமலே தலை ஆட்டி ஆட்டி ரசித்துக்கொண்டிருந்தேன். நண்பர் கடுப்பில் என்னை பார்த்துக் கொண்டிருந்தார்.

கண்ணாடியில் பின்னால் உட்கார்ந்திருந்த அவளைப் பார்த்தேன். பெருவிரலை தூக்கிக் காட்டி தனது பாராட்டை எனக்கு தெரிவித்தாள். கடைக்கண்ணால் நண்பர் என்னை பார்க்கவில்லை என்பதை உறுதிப்படுத்தியபின்பு அவளைப் பார்த்து புன்னகைத்தேன். தெய்வீகமாய் புன்னகைத்தாள். அதில் நான் கரைந்துபோனேன்.

அவளின் நண்பியை நாம் ஏற்றிக் கொள்ளவேண்டும் என்று ஒப்பந்தமிருந்தது. நண்பர் நேரமாகிறது என்றார். "சூ... சத்தம் போடப்படாது" என்று கூறியபடியே நண்பியினை அழைத்துவந்து வாகனத்தில் ஏற்றினாள். நண்பர் மூச்சுப் பேச்சின்றி உட்கார்ந்திருந்தார்.

மீண்டும் வாகனம் ஓடத் தொடங்கியது.

"சஞ்சயன் மாமா, சத்தத்தை அதிகமாக்கு என்றாள்"

நான் முடிந்தளவுக்கு திருகினேன்.

நண்பர் பல்லை நெருமிக் கொண்டிருந்ததை அவதானித்தேன்.

பின்னால் இருந்த இருக்கையில் அவள் தன்னை மறந்து ஆடிக்கொண்டிருந்தாள். அவளின் நண்பியிடமும் நடனத்துக்கான அசைவுகள் தெரிந்தன.

நானும் தலையாட்டியபடியே வாகனத்தை செலுத்திக்கொண்டிருந்தேன்.

அவர்களை இறக்கிவிடும் இடம் வந்தது.

நண்பர் "அப்பாடா" என்றபடியே இறங்கிக் கொண்டார். அவளின் சகோதரியும், நண்பியும் இறங்கிக்கொண்டார்கள்.

"சஞ்சயன் மாமா" என்றாள்

"என்னம்மா" என்றேன்

"புதுவருட வாழ்த்துக்கள்" என்று என்னைப் பார்த்துக் கூறியபடியே இறங்கினாள்.

என் பூக்குட்டியின் வாழ்த்தினை பெற்றதைப்போல உணர்ந்து, காற்றில் நடந்துகொண்டிருந்தேன், நான்.

பெண் குழந்தைகளின் தந்தையர்கள் பாக்கியவான்கள்.

எனது நண்பர் பெரும் பாக்கியவான்.

**முற்றும்**

---

# மனமே அனைத்திற்கும் அடிப்படை

(தன்யா)




மன்னாரில் இருந்து சுயதொழில் கருதி திருகோணமலைக்கு வந்து தனியாக வசித்து வரும் ஒரு பெண்ணிற்கு நேர்ந்தது...

தனது குடும்பத்தினை விடுத்து தனியாக வாழ்ந்து வருபவள் ஹம்சா. இவள் மிகவும் தற்துணிவு கொண்டவள். பேயை நீ கண்ணுற்றாள் என்ன செய்வாய்? என அவளது நண்பி வினவியதற்கு வரட்டுமே எப்படி இருக்கு, என்ன தான் செய்யும் என்பதை அறிந்து கொள்ளலாம் தானே என சாதாரணமாக விடை பகர்வாள்.

அவள் வாடகைக்கு வீடெடுத்து மிக்சர், வறுத்த கச்சான் போன்றவற்றை ஆட்களை பணிக்கமர்த்தி செய்து வந்தாள். தற்பொழுது இருந்து வரும் வீட்டினை உடனடியாக காலி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளான அவள், வாடகைக்கு வீடு தேடினாள்.

எங்கு சுற்றி யாரிடம் கேட்டலும் அந்த குறித்த வீடே திரும்பித் திரும்பி அவளிடத்தில் வந்தது. எதையும் பல தடவைகள் யோசித்து செய்யும் ஹம்சாவிற்கு அந்த வீட்டிற்கு போவது குறித்து பல தடைகள் கண் முன் தோன்றின. மனது இடம் கொடுக்கவில்லை அவளுக்கு.

அவ்வீட்டில் ஏழு வருடங்களிற்கு முன்னர் வைரவரை வைத்து ஒரு அம்மா வழிபட்டதாகவும், அந்த அம்மா வேறு இடம் நகர்ந்ததும் அந்த வீட்டை வாங்கிய கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர் வைரவரை கவனிக்காது விட்டு விட்டதாகவும் ஆதலால் அவர் மிகுந்த கோபத்தில் இருப்பதாகவும் அவ்வீட்டைப் பற்றி ஒருவர் தெரிவித்தார்.

இப்பொழுது என்ன செய்வது என முழித்துக் கொண்டிருந்த ஹம்சாவிற்கு இன்னொருவர் ஊடாக அக்குறித்த வீட்டைப்பற்றி தெரிய வந்தது. அதாவது அவ்வீட்டில் 2008ம் ஆண்டளவில் ஒரு பெண் மாமியார் கொடுமையினால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாகவும், அங்கு அப்பெண்ணின் ஆத்மா தொடர்ந்தும் அங்கேயே இருந்து வருவதாகவும் அதனால் நிறைய கலவரங்கள் அந்த வீட்டில் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு கேள்விப் பட்டதன் பின்னரும் அவ்வீட்டிற்கு செல்லும் அளவிற்கு துணிந்தவளாக காணப்படவில்லை இந்த ஹம்சா. எனவே அவ்வீட்டிற்கு செல்லும் முடிவை கைவிட்டு விட்டு வேறு வீடு தேடினாள்.

ஒன்று வீடு சிறிதாக காற்றோட்டம் இல்லாமல் இருக்கும் அல்லது நினைத்துப் பார்க்க முடியாத அளவு வாடகை, முற்பண கோரிக்கை காணப்படும்.

இன்னும் இரண்டு நாட்களே இருந்தன இவள் அந்த வீட்டை விட்டு எழும்புவதற்கு. எனினும் கையில் வேறெந்த வீடும் கிடைக்கவில்லை.

சரி எதற்கும் அவ்வீட்டை சென்று பார்த்துவிட்டு வருவோம் என அவளுக்கு புத்தி கட்டளை இட்டது.

அவளும் சென்றாள், வீட்டினுள் நுழைய முதல் அயல்வீட்டு பெண், அவள் திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்கு தாயானவள், கேட்டாள் "நீங்களா இந்த வீட்டிற்கு வரப்போறீங்க? என இழுத்த இழுப்பில் ஹம்சாவிற்கு நெஞ்சு படபடத்தது. இல்லை.... இங்கு முந்தி வைரவர் வழிபாடு இருந்தது. நானும் அவருக்கு விளக்கேற்றி இருக்கின்றேன். எனினும் இப்போது வழிபாடு ஏதும் இடம்பெறாமையினால் அவர் கோபமாக இருக்கிறார். என்னுடைய கனவில் ஒரு கறுப்பு உருவம் ஆடைகள் ஏதுமின்றி என் அருகில் வந்து நிற்பது போல் அடிக்கடி காண்கின்றேன். எனக்கென்னமோ பயமாக இருக்கு என அனைத்தையும் கூறி முடித்தாள் அவர். அவரது பாரம் குறைந்தது போலும் பெருமூச்சும் விட்டிருந்தார்.

ஹம்சா, இறுதி முடிவெடுத்தாள். அந்த வீட்டிலேயே குடியேற வேண்டி நிலைக்கு ஆளானாள். மறுநாளே பால் காய்ச்சினாள். பணம் கைமாறப்பட்டது.

---

# காலதாமதமாகும் காசோலைகள்

இன்றைய கொடுக்கல் வாங்கல்கள் என்பது அதிகமாக காசோலைகளினூடாகவே பெரும்பாலும் நடைபெற்று வருகின்றன. அதிலும் தொழில்சார் கம்பனிகள் தொடக்கம் சாதாரண வியாபார நிலையங்கள் வரை பணப் பரிமாற்றங்கள் வங்கிகளினூடாகவே நடைபெற்று வருவதும் மிகவும் பாதுகாப்பானதும் அனைவரும் கருதுகின்றனர். ஆனாலும் அன்றாட நடைமுறையில் "கடைகளில் காசோலைகள் காட்டும் கறாட்டி" தொழில் முகாமைகள் இருபகுதிக்குமிடையில் (வழங்குனர், பெறுநர்) திண்டாடும் சாதாரண தொழிலாளர்கள் பந்திற்கு சமனான வாழ்க்கையாகும். இன்று போய் நாளை வா, வங்கியில் தாமதம் இதுபோன்ற நாளாந்த நிகழ்வு விடயங்களும் காரணமாகி விடுகின்றது. கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் முரண்பாடுகள், சிக்கல்கள் தொழிலையும் பாதித்து விடுகின்றது. இதைவிட சமூக ரீதியான சில கசப்புணர்வுகளும் பாதிப்புக்களை ஏற்படுத்த தவறுவதில்லை. இதற்கிடையில் பொருட்கள் கொள்வனவின் போதும், விற்பனையின் போதும் கடை உரிமையாளர்கள் பல இன்னல்களையும் சந்திக்க நேரிட்டாலும் கொள்வனவாளர்களிடமிருந்து ஏதோ பாதிப்படையாது (கம்பனிகள், விநியோகஸ்தர்கள்) காப்பாறப்பட்டு விடுகிறார்கள்.

சில அவசியப் பொருட்களும் மற்றும் வேறு தானியவகைப் பொருட்களு-க்கும், கம்பனிப் பொருட்களுக்கும் இடையில் பணக் கொடுக்கல் வாங்கல்கள் முந்தலாம் அல்லது பிந்தலாம். எதுவானாலும் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரிடமுமே இணைந்து செயற்பட வேண்டிய நிலை உள்ளது.

குறித்த ஒரு சிறிய வியாபார வட்டத்தினுள் மீண்டும், மீண்டும் சந்திக்கும் தொழில்சார் உறவுகளிற்கிடையில் ஏன் ஏமாற்றங்கள் தினம் தோறும் அதேவேளை சில முதலாளித்துவப் பண்புடையவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அவர்களும் அனைத்துப் பொறுப்புக்களையும் கொண்டவர்கள் தானே. அரஹீவர்களுடன் அதிகம் பேச வேண்டிய தேவைகள் ஏற்படுவதுமில்லை. மனித அலைச்சல் மனரீதியான, உடல் ரீதியான பல நலக் குறைவுகளையும் ஏற்படுத்துகின்றன. இவ்வாறான விடயங்களில் இரு சாராரும் பாதிக்கப்படாமல் சற்று மனித நேயத்துடன் நடந்து கொள்ள வேண்டிய தேவை ஏற்படுத்தப்பட்டு சிறந்த தொழில்சாரராக அனைவரும் மாறினால் யாரையும் பார்த்து யாரும் மறையவும் தேவையில்லை வெறுப்புக்களை விதைக்கவும் தேவையில்லை. நாணயங்கள் நாணயமாக்கப்பட வேண்டும்.



- - மலைநேயன் - -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சீனாவிடம் வாய்க்குமா ரணிலின் திட்டம்

கே.சஞ்சயன்
www.tamilmirror.lk

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த புதன்கிழமை சீனாவுக்கான மூன்று நாள் உத்தியோக பூர்வ பயணத்தை ஆரம்பித்திருக்கிறார். இந்தப் பயணத்தின் உச்சக்கட்டமாக, சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங்கை, பெய்ஜிங்கில் நேற்று சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

மஹிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்த போது, அவருக்கும்



சீனாவுக்கும் இடையில் நெருக்கம் அதிகமாக இருந்தாலும் மஹிந்த ராஜபக்ச, பலமுறை சீனாவுக்கான பயணங்களை மேற்கொண்டிருந்தாலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தப் பயணம், கூடுதல் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கையில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற ஆட்சிமாற்றத்துக்குப் பின்னர், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்பட்ட ஓர் இடைவெளியை நிரப்பும் ஆர்வத்தில், இருநாடுகளும் இருப்பது தான், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தப் பயணம் கூடுதல் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியதற்கு முக்கிய காரணம். கிட்டத்தட்ட 16 மாத காலத்தில், இரண்டு நாடுகளுமே தமக்கிடையில் ஏற்பட்டுள்ள இடைவெளியின் பாதகத்தன்மையை அனுபவித்திருக்கின்றன என்றே கூறலாம். இதனால் தான், மீண்டும் உறவுகளை வலுப்படுத்துவதில் இரு நாடுகளும் கூடுதல் அக்கறை கொண்டிருக்கின்றன.

ஆறு அமைச்சர்கள் சகிதம், சீனா சென்றிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இது முக்கியமானதொரு பயணம். அவர் கடந்த ஜனவரி மாதம் பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னர், மேற்கொள்ளும் சவாலான பயணம் என்று கூட இதனைக் குறிப்பிடலாம். இதற்கு முன்னர் அவர் பயணம் மேற்கொண்ட நாடுகளுடன், இந்தளவுக்கு இடைவெளிகள் இருந்ததில்லை. எனவே, சீனாவுடனான இந்த இடைவெளியை நீக்க வேண்டிய பொறுப்புமிக்க பயணமாகவே இது அமைந்திருக்கிறது. அதுவும், இலங்கை பொருளாதார ரீதியாக நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் ஒரு சூழலில், எதிர்கால பொருளாதார வாய்ப்புகள் குறித்த நம்பிக்கையை ஏற்படுத்தும் பொறுப்பு அவரிடம் உள்ளது.

இப்போதைய அரசாங்கத்தில் உள்ளவர்கள், முன்னர் எதிர்க்கட்சியில் இருந்த போதும் ஆட்சிக்கு வந்த புதிதிலும், சீனாவின் திட்டங்களை விமர்சித்து வந்தனர். ஹம்பாந்-தோட்டைத் துறைமுகம், மத்தல விமான நிலையம் என்பனவற்றை வெள்ளை யானை என்று வர்ணித்த-வர்கள் தான், இப்போது அந்தத் திட்டங்களைச் செயற்படுத்தும் புதிய வாய்ப்புகளைத் தேடத் தொடங்கியுள்ளனர்.

சீனாவின் திட்டங்களினால் தான், இலங்கை கடன்சுமைக்குள் தள்ளப்பட்டதாகக் குற்றஞ்சாட்டிய தற்போதைய அரசாங்கம், வேறு வழியின்றி மீண்டும் சீனாவிடமே தஞ்சமடைய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில், சீனாவின் முதலீட்டுத் திட்டங்களுக்கு கூடுதல் வட்டியுடன் கடன்கள் வழங்கப்பட்டன. அவற்றைத் திருப்பிச் செலுத்துவதில் அரசாங்கம் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கிறது. இதனைக் கடுமையாக விமர்சித்த தற்போதைய அரசாங்கம், மீண்டும் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதற்கு, சீனாவின் தயவை நாட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

சீனா, உலகில் தவிர்க்க முடியாத பொருளாதார சக்தியாக வலுப்பெற்றிருப்பது ஒரு காரணம். இன்றைய நிலையில், சீனாவைத் தவிர வேறெந்த நாடும் பெரும் முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்ளத் தயாரில்லை என்பது இன்னொரு காரணம். சீனாவின் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டதால், பெருமளவில் பணப்புழக்கம் குறைந்து போனது.

இது, தாம் பொருளாதார நெருக்கடி ஒன்றை எதிர்கொள்வது போன்ற தோற்றத்தை மக்கள் மத்தியில் தோற்றுவித்திருப்பது மற்றொரு காரணம். பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெறாவிடினும், வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது, உள்ளூர் மக்களிடையே வேலைவாய்ப்பு, மற்றும் ஏனைய வடிவங்களிலான பணப்புழக்கம் அதிகரிக்கும். எல்லாத் திட்டங்களும் இடைநிறுத்தப்பட்டதால், உள்ளூர் மக்களில் அநேகமானோரிடம் பணப்புழக்கம் குறைந்து, ஒரு வெறுமையான நிலை தோன்றியதையும் மறுக்க முடியாது.

இந்த வெறுமை நிலைக்கு முடிவுகாண வேண்டுமாக இருந்தால், பாரிய முதலீட்டுத் திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். சீனாவைக் கைவிட்டால், அது சாத்தியமில்லை என்று உணர்ந்த நிலையில் தான், எப்படியாவது அந்த நாட்டிடம் இருந்து புதிய முதலீடுகளை பெற்றுக் கொள்வது என்ற உறுதியுடன் பெய்ஜிங் சென்றிருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.


மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் காலத்தில், சீனாவுடன் இருந்த நெருக்கத்தை விமர்சித்தவர், சீனாவின் முதலீடுகளை விமர்சித்தவர் இப்போது, அந்த சீனாவிடம் கையேந்துவது பொருத்தமா என்றெல்லாம் கேள்விகள் எழுப்புகின்றனர். முன்னர் சீனாவின் திட்டங்களை எதிர்த்த ரணில் விக்கிரமசிங்க இப்போது, சீனாவை நாடுவது குறித்து டுவிட்டரில் பதிவு ஒன்றை இட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, அரசாங்கத்தின் சீனா பற்றிய நிலைப்பாடு என்ன என்று கேள்வி எழுப்பியிருந்தார். ஆனால், மஹிந்த அரசாங்கத்தின் சீனா பற்றிய நிலைப்பாட்டுக்கும், தற்போதைய அரசின் சீனா பற்றிய நிலைப்பாட்டுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு இருப்பதை மறுக்க முடியாது.

மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் காலத்தில் இலங்கையில் முன்னெடுக்கப்-பட்ட சீனாவின் திட்டங்கள் அனைத்திலும், ரிஸ்க் எடுத்துக் கொண்டது இலங்கை அரசாங்கமே தவிர சீனா அல்ல. இலங்கை கேட்கும் நிதி அனைத்தையும் எந்த நிபந்தனையும் இன்றி சீனா கொடுத்துக் கொண்டிருந்தது. மஹிந்த ராஜபக்சவே முன்னர் இதனைப் பற்றிப் பெருமையாக கூறியிருந்தார். எந்தக் கேள்வியும் இன்றி நிபந்தனை விதிக்காமல் சீனா நிதியைக் கொடுக்கின்ற போது, அதனைச் சார்ந்து செயற்படுவதில் என்ன தவறு என்று மஹிந்த ராஜபக்ச கேட்டிருந்தார். சீனா அவ்வாறு நிதியைக் கொடுத்தது உண்மை. அந்த நிதி வருமானத்தை ஈட்டித் தரும் துறைகளில் முதலீடுகள் செய்யப்படுகிறதா என்பதை-யெல்லாம் சீனா கவனத்தில் எடுக்க-வில்லை. சீனாவுக்கு தனது நிதியைப் பெருக்கும் ஒரு முதலீட்டு வாய்ப்பும் கிடைத்தது, தமது நாட்டு நிறுவனங்களு-க்கும் நிபுணர்களுக்கும் தொழில் வாய்ப்பும் கிடைத்தது. அதில் சீனா எந்த அபாயத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கவில்லை. முற்றிலும் அபாயத்தை எதிர்கொண்டது இலங்கை தான். அதனால் தான் சீனா, எந்தக் கேள்வியும் இன்றி நிதியைக் கொடுத்தது. அதன் விளைவு, சீனா கட்டிக்கொடுத்த துறைமுகம், விமான நிலையம் என்பன காய்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் சீனா, தான் கொடுத்த கடனை வட்டியுடன் தவறாமல் வசூலித்துக் கொண்டிருக்கிறது.

இதுபோன்றதோர் அபாய நிலைக்குள் செல்லாத வகையில், சீனாவின் முதலீடுகளைப் பெறும் முயற்சியில் தான் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார். மஹிந்த ராஜபக்சவைப் போல, அவர் சீனாவில் கடன்களைப் பெறுவது பற்றிப் பேச விரும்பவில்லை. ரணில் விக்கிரமசிங்கவின் இந்தப் பயணத்தின் முக்கிய இலக்கு, சீனாவின் வெளிநாட்டு முதலீடுகளை இலங்கையில் அதிகரிப்பது தான். சீன நிறுவனங்களை இங்கு முதலீடு செய்ய வைப்பதன் மூலம், இலங்கைக்குள் தொழில் வாய்ப்புகளையும் பணப்புழக்கத்தையும் அதிகரிக்கலாம். அதைவிட, முதலீட்டுக்கான அபாயங்களையும் இலங்கை எதிர்கொள்ள வேண்டியதில்லை. கடன்சுமை, வட்டி என்றும் புலம்ப வேண்டியதில்லை.

இதற்காகவே, ஹம்பாந்தோட்டையில் முதலீட்டு வலயம் ஒன்றை அமைப்பதற்கும் அதற்காக நிலங்களை ஒதுக்கவும் அரசாங்கம் தயாராக இருக்கிறது. அதாவது, ரிஸ்க் எடுப்பதை சீனாவிடமே விட்டுவிடப் பார்க்கிறார் ரணில். இதன் ஆபத்துக்களை சீனா உணராமலும் இல்லை. ஆனாலும், இப்போதைய நிலையில், சீனாவுக்கும் பல நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. மஹிந்த ராஜபக்சவுக்குப் பிந்திய இலங்கையுடன் ஏற்பட்ட உறவுகளின் விரிசல், சீனாவின் நலன்களைப் பாதிப்பதாகவே இருந்திருக்கிறது.

இந்தக் காலகட்டத்தில்



அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் முதலான, சீனாவுக்குப் போட்டியான நாடுகளுடன் இலங்கை, கொள்கை ரீதியாக நெருங்கிச் சென்றிருக்கிறது. இது பொருளாதார ரீதியாக மட்டுமன்றி, பாதுகாப்பு ரீதியாகவும், சீனாவுக்கு பெரும் அடியாக இருந்தது.

இந்தியப் பெருங்கடலில், உறுதியாக நகர்வுகளை முன்னெடுத்து வந்த சீனாவுக்கு, மஹிந்த ராஜபக்சவுக்குப் பிந்திய காலகட்ட இலங்கையின் போக்கு, பெரும் தடையாக மாறியிருக்கிறது. இது சீனாவின் பட்டுப்பாதைக் கனவுத் திட்டத்துக்கும் சவாலாக மாறியிருக்கிறது. இதனால் தான், எப்படியாவது இலங்கையுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு சீனாவும் வந்திருக்கிறது.

பிரிந்து நின்றதன் பாதக விளைவுகளை வலுவாக அனுபவித்த பின்னர் தான், இரண்டு நாடுகளும் மீண்டும் உறவுகளை வலுப்படுத்தும் முடிவுக்கு வந்துள்ளன என்பதால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தப் பயணம் சாதகமாகவே அமையலாம்.

ஆனாலும், **பொருளாதார நலன்களை மட்டும் கருத்தில் கொள்ளாமல், பாதுகாப்பு நலன்களையும் சீனா முதன்மைப்படுத்த முனைந்தால், அது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் சிக்கலாக மாறும். ஏனென்றால், அது, தற்போது நல்லுறவைக் கொண்டுள்ள இந்தியா மற்றும் அமெரிக்காவுடனான உறவுகளுக்குச் சவாலை ஏற்படுத்தக் கூடும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமையல் சமையல்

## சோயாவில் கட்லெட்

**தேவையான பொருட்கள்**

சோயாமாவு - 50 கிராம், எலுமிச்சை சாறு - ½ தே.கரண்டி, மஞ்சள்பொடி - ¼ தே.கரண்டி, உப்பு - தேவைக்கேற்ப, அரிசி மாவு - 2 தே.கரண்டி, உருளைக்கிழங்கு – 2, வெங்காயம் - 1, கரட் - 1, இஞ்சி, பூண்டு அரைத்தது - 1 தே.கரண்டி, கரம் மசாலா - ½ தே.கரண்டி, எண்ணெய் - 75 கிராம், கொத்துமல்லி - சிறிதளவு



### செய்முறை

உருளைக்கிழங்கு, கரட் இவற்றை வேக வைத்து நன்றாக நசித்துக் கொள்ளவும், பின்னர் ஒரு தே.கரண்டி எண்ணெயை தாச்சிசில் விட்டு பொடிப்பொடியாக நறுக்கிய வெங்காயம், பச்சைமிளகாய் இவற்றைப் போட்டு வதக்கி அதனுடன் உருளை, கரட், மஞ்சள், உப்பு, இஞ்சி, பூண்டு சேர்த்து வதக்கிய பின் பாதி சோயாமாவு, அரிசி மாவு சேர்த்துக் கலந்து இறுகியவுடன் இறக்கிக் கொள்ளவும். நன்றாக ஆறியபின் எலுமிச்சைசாறு சேர்த்து பின் மற்ற சோயா அல்லது அரிசி மாவை உப்பு கலந்து ரெடியாக தட்டில் வைத்துக் கொள்ளவும். கட்லெட் செய்ததை மாவில் போட்டு புரட்டி (உருட்டி) சிறிது எண்ணெயில் பொரித்து எடுக்கவும். மிகக் குறைவான எண்ணெயிலேயே சோயா கட்லெட் செய்துவிடலாம்.

## ஆட்டிசம் குறித்த சில தகவல்கள் :

குழந்தை பிறந்த பின் காது கேட்காமல் போவது, பேசாத்தன்மை, பார்வைக்குறைபாடு, உடல் உறுப்புகளின் வளர்ச்சிக்குறைபாடு போன்றவற்றை எளிமையாக கண்டுகொள்ள முடியும். ஆனால் ஆட்டிசம் அப்படி எளிமையாக வகைப்படுத்த முடியாதது.

**ஆட்டிசம் என்றால் என்ன?**



ஆட்டிசம் என்பது மூளை வளர்ச்சியில் ஏற்படும் குறைபாடாகும். மூளையின் முக்கிய செயல்பாடுகளாகிய பேச்சு திறன், சமுதாய தொடர்பு மற்றும் புலன் உணர்வு ஆகியவற்றை பாதிக்கும் நோய். மற்ற குழந்தைகளைப் போல் பேச முடியாது, நடக்க முடியாது, நாம் யார், எங்கு இருக்கிறோம் என்ற விவரங்கள் தெரியாது.

இதனால் அவர்களால் மற்றவர்களை போல் இயல்பு வாழ்க்கை வாழ முடியாது. ஆட்டிசம் பிறவி குறைபாடாக இருந்தாலும், பிறந்த உடனே கண்டுபிடிக்க முடியாது.

6 மாதம் முதல் 3 வயதுக்குள் ஆட்டிசம் குறைபாட்டை கண்டுபிடிக்க முடியும். இது குறித்து விழிப்புணர்வு இல்லாததால், பலர் 3 வயதுக்குள் கண்டுபிடிக்க தவறி விடுகின்றனர். 3 வயதுக்குள் கண்டுபிடித்தால் உரிய பயிற்சி அளித்து, ஓரளவு குறைபாட்டை சரி செய்து விடலாம்.

**"ஆட்டிசம்" வார்த்தை வந்தது எப்படி?**

1943ல் மருத்துவர். லியோ கானர் (Dr. Leo Kanner) என்பவர் உலகிற்கு ஆட்டிசம் என்ற வார்த்தையையே அறிமுகப்படுத்தினார். அவர் தனது "அன்பு வளையத்தை சிதைக்கும் ஆட்டிசம்" (Autistic Disturbances of Affective Contact) என்ற ஆய்வறிக்கையை நெர்வஸ் சைல்ட் (Nervous Child) என்ற பத்திரிக்கையில் வெளியிட்டார். அதில்தான் உலகில் முதன் முதலாக ஆட்டிச பாதிப்புடைய குழந்தைகளின் பிரச்சனைகள் பேசப்பட்டது.

தொடரும்

அழகு குறிப்பு



## இளநரையை இயற்கையாக தடுக்க.....

நரை முடி வருவதற்கு இரண்டு காரணம் தான். ஒன்று உடலில் பித்தம் அதிகமாகிவிடுவது மற்றும் வயோதிகத்தால் முடிக்கு போகும் போஷாக்கு குறைவது தான். இளநரை மற்றும் நரை முடியை கருமையாக்க இயற்கை வழிகள்

தினமும் தலைக்குளித்தலை தவிர்த்து வாரத்தில் இருநாட்களை தேர்வு செய்து தலை குளிக்கலாம். இதனால் செம்பட்டை நிறத்தில் தோன்றுவது தவிர்க்கப்படும். பித்தத்தால் ஏற்படும் இளநரையைப் போக்குவதற்கு அதிகமாக கொத்தமல்லியை உணவில் சேர்க்கவேண்டும்.

தினமும் காலையில் வெறும் வயிற்றில் மல்லித்தூள் காபி வைத்து குடிக்கவேண்டும்.

கீழாநெல்லியை நல்லெண்ணையுடன் கலந்து காய்ச்சி அந்த எண்ணெயை தினமும் தடவி வர வெண்முடி குறைந்து கருமை வளரும்.

கறிவேப்பிலை தான் வெள்ளை முடியை அகற்ற சரியான வழி. தினமும் கறிவேப்பிலை துவையல் செய்து சாப்பிடலாம்.

கறிவேப்பிலை நன்கு அரைத்து வேர்களில் தடவி வந்தால் விரைவில் முடிக்குத் தேவையான போஷாக்கு கிடைத்துவிடும். கருமுடி வளர ஆரம்பிக்கும்.

தினமும் ஒரு நெல்லிக்கனியை சாப்பிடுவதால் நரை முடி மற்றும் சகல முடிப்பிரச்சினைகள் மட்டுமின்றி உடலில் உள்ள சருமப்பிரச்சினைகள் மற்றும் கயுல்சியம் சத்துக்குறைவு போன்ற அனைத்துப் பிரச்சினைகளும் சரியாகிவிடும்.



# "கண் திறந்தே உறங்குகின்றோமா???"

## உலக நீர் தினமும், சம்பூர் நிலக்கரி மின்நிலையத்தினால் எமக்கு ஏற்படவிருக்கும் நீர் வளப் பாதிப்புக்களும்

பாகம் – 03

UN WATER
WORLD WATER DAY
22 MARCH 2016 - WATER AND JOBS

சு.சிவசங்கரன் M.Sc. (PDN)
முதுவிஞ்ஞானமாணி
ஒருங்கிணைந்த நீரியல்வள முகாமைத்துவம்

கடந்தவார தொடர்ச்சி.....

எனவே அனல் மின்நிலையத்திலிருந்தான சாம்பர் சீமெந்து தொழிற்சாலையின் 47% தேவையை பூர்த்திசெய்யும் என்பதில் ஐயமில்லை.

எனினும், நிலக்கரி எரிக்கப்படும் போது காற்றினால் பல இரசாயனப் பதார்த்தங்கள் (Fiyash) பறக்கும் சாம்பர் மூலம் சூழலுக்குக் காவிச்செல்லப்படுவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. இவை அதிக அளவான பார உலோகங்களைக் (Heavy metals) கொண்டிருக்கின்றன. நிலக்கரிச்சாம்பர் பார உலோகங்களாக ஈயம்(Pb), பாதரசம்(Hg), நிக்கல்(Ni), வெள்ளியம்(Sn), கட்மியம் (Cd), அன்திமொனி(Sb), ஆர்சனிக்(As) அத்தோடு கதிர் வீச்சு மூலகங்களான தோரியம்(Th), ஸ்ரொன்ஜியம் (Sr) என்பவற்றை அதிகமாகக் கொண்டிருக்கும். இந்த பாரஉலோக ஒக்சைட்டுகளு[illegible] சேர்வைகளும் இலகுவ[illegible] நீரில் கரையும் தன்[illegible]யுடையவை.

வெளிவிடப்படும் பா[illegible] உலோகச் சேர்வைக[illegible] கரைந்து நீர்நிலைக[illegible] நிலத்தடி நீர் என்பவற்றி[illegible] கழுவப்பட்டோ (Was[illegible] அல்லது வடிந்தோ (Lea[illegible] சென்றடையும். இவற்[illegible] அளவு குடிநீரில் அதிக[illegible]பதன் காரணமாக பல்வே[illegible] மனித உடற் தொழ[illegible] தாக்கங்களை உ[illegible] பண்ணும். இதன் மூ[illegible] புற்றுநோய் போன[illegible] மீளமுடியாத நோய[illegible] தாக்கங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. அதுமட்டுமின்றி இவை எதிர்கால சந்ததிகளிலும் ஆரோக்கியத்திலும் செல்வாக்குச் செலுத்தும் வாய்ப்பு-முள்ளது. இவை உடலில் அதிகமாகச் சேரும்போது கர்ப்பிணித் தாய்மார்களிலும் குறைப்பிரசவம், மந்த புத்தியுடைய குழந்தைப் பிறப்பு மற்றும் அங்கவீனமான குழந்தைகளின் பிறப்பு போன்றவற்றை இலகுவில் வெளிக்காட்டும்.

### பாரஉலோகங்களால் மனிதனுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்

| | |
|---|---|
| ஆர்சனிக் (As) | இது ஒரு புற்றுநோயாக்கியாகும். தோல், நூரையயீரல், ஈரல், சிறுநீர்ப்பை, என்பவற்றில் புற்று நோயை ஏற்படுத்தவல்லது. சிறிய அளவில் உள்ளெடுக்கப்படும் போது கூட குருதிக்கலங்களின் உற்பத்தியைக் குறைக்கும், சீரற்ற இதயத்துடிப்பு நீண்டகாலத்தில் உள்ளங் கை, பாதம் என்பவற்றில் வலிதரும் சிறிய புற்று உண்டுபண்ணும். |
| கட்மியம் (Cd) | சிறு நீரகநோய்கள், நூரையீரல் அழற்சி இலகுவில் உடையக்கூடிய என்பு போன்ற நோய்களை உண்டாக்கும். |
| ஈயம் (Pb) | இதுவும் ஒரு புற்று நோ்யாக்கியாகும். நொதியச் சமநிலையை பாதித்து உடலில் ஒவ்வொரு பாகங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தவல்லது. மூட்டுகள் மொழிகளில் சுருக்கங்கள் உண்டுபண்னும் அதிகமாக உள்ளெடுக்கப்படும் போது மூளை சிறுநீரகங்களில் பாதிப்பை ஏற்படுத்தும். கர்ப்பிணித்தாய்மார்களில் குறைப்பிரசவம் சிறுவர்களுக்கு மந்த நிலையை ஏற்படுத்தும். |
| | இதுவும் ஒரு புற்று நோயாக்கியாகும். நரம்புத் தொகுதியை அதிகமாக பாதிக்கச் செய்வதுடன் தோல் அழற்சி மற்றும் |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 24

1. பற்கள் இல்லாத பாலூட்டி
   I. அழுங்கு ii. மாடு iii. எலி iv. வௌவால்

02. பொதுச்சுகாதாரப் பரிசோதகரைக் குறிக்கும் எழுத்துக்கள்?
   I.D.M.O ii.P.H.I iii.A.G.E iv.A.S.P

03. கந்தளாய்க்குளத்தை கட்டியவர் யார்?
   I. வசபன் ii. தேவநம்பியதீசன் iii. மகாசேனன் iv. 2ம் அக்போ

04. ஆணி வேர்த்தாவரம்
   I. தென்னை ii. கித்துள் iii. வேம்பு iv. பனை

05. தெறியோட்டை தைக்க பயன்படுத்தப்படும் தையல் முறை யாது?
   I. கம்பளி ii. நரம்பு iii. மீன்முள்ளு iv. நிரப்பு

06. சூரியனுக்கு அண்மையில் உள்ள கோள்
   I. புதன் ii. சுக்கிரன் iii. செவ்வாய் iv. வியாழன்

07. மரணித்தவர்களின் உடலை நீரினால் கழுவி சுத்தம் செய்வோர்
   I. பௌத்த சமயத்தினர் ii. இந்துசமயத்தினர் iii. கத்தோலிக்க சமயத்தினர் iv. இஸ்லாம் சமயத்தினர்

## பகுதி – 02

01. அண்ணா வீட்டுக்கு வந்தது அப்பா வீட்டுக்கு வருவதற்கு 35 நிமிடங்களுக்கு முன்பாகும். அம்மா வீட்டுக்கு வந்தது அப்பா வீட்டுக்கு வந்து 45நிமிடங்களுக்குப் பின்பாகும் .அதன் படி, அம்மாவீட்டுக்கு வந்தது பி.ப 4.00 மணிக்கு எனின், அண்ணா வீட்டுக்கு வந்த நேரம்?

..........................................

02. சதுரவடிவக்காணியொன்றின் ஒருபக்க நீளம் 40அ ஆகும். அதன்படி, அச்சதுரவடிவக் காணியைச் சுற்றி ஐந்து. நிரைக்கம்பி அடிக்கத் தேவைப்படும் கம்பியின் மொத்த நீளம்?

..........................................



03. உருவில் நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணாகக் தருக?

..........................................

04. கமலி பிறந்த திகதி 2001.11.28 ஆகும் 2015.12.28 திகதி கமலிக்கு எத்தனை வயது?

..........................................

05. நான்முகி ஒன்றின் 3 முகங்கள் மாத்திரம் நிறந்தீட்டப்பட்டுள்ளன, அதன்படி, அந்த நான்முகியின் நிறந்தீட்டிய முகங்களின் எண்ணிக்கை அந்த நான்முகியின் மொத்தமுகங்களின் என்ன பங்காகும்?

..........................................

06. ஷாருக் தன்னிடமிருந்த பணத்திதில் 1/5 பங்கை செலவு செய்தான் மீதியாக அவனிடம் ரூ.30.00 இருந்தது எனின் ஆரம்பத்தில் அவனிடம் இருந்த மொத்தப்பணம்?

..........................................

07. 45 நிமிடங்களில் 15Km தூரம் செல்லக்கூடிய ஒரு வாகனம் அரைமணித்தியாலத்தில் எத்தனை Km தூரம் செல்லும்?

08. நாடாத்துண்டொன்றின் நீளம் 75cm ஆகும் அவ்வாறான 4 நாடாத்துண்டின் நீளம் எத்தனை cm

..........................................

**((அடுத்த வாரத்திலிருந்து விடைகள் பிரசுரமாகும்.))**



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகான்**







## கை மேல் பலன் கிட்டியது

அரசன் ஒருவன் சகுனங்களில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவன். அரண்மனை சோதிடர் இந்த நம்பிக்கை மேல் குளிர் காய்ந்து கொண்டிருந்தார். ஒரு நாள் இப்படித்தான் "அரசே, அதிகாலை எழுந்தவுடன் இரண்டு காக்கைகளை ஒன்றாகப் பார்த்தால் நாள் சிறக்கும்" என்று நம்பிக்கை ஊட்டினார்.

மன்னன் சேவகனை அழைத்தான். காலையில் எங்காவது இரண்டு காக்கைகள் தென்பட்டால் உடனே தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான்.

அதன் பின் தினமும் பொழுது விடியும் முன்பே சேவகன் தெருவில் அலையத் தொடங்கி விடுவான்.

ஒரு நாள் அரண்மனக்குப் பக்கத்துத் தெருவில் இரண்டு காக்கைகள் ஒன்றாக அமர்ந்திருப்பதைக் கண்டான். "அடடா! நல்ல சகுனம், இன்று மன்னர் நமக்கு நிச்சயம் பதவி உயர்வு கொடுப்பார் என்று மகிழ்ச்சி மிகுதியுடன் மூச்சிரைக்க ஓடி வந்து மன்னரிடம் விபரம் சொன்னான்.



இதைக் கேட்டு துள்ளி எழுந்த மன்னன் சேவகனுடன் அந்த இடத்திற்கு ஓடினான். அதற்குள் ஒரு காக்காய் "வாக்கிங்" போய் விட்டது.

மன்னனுக்கு மூக்கின் மேல் கோபம் வந்து விட்டது. தளபதியை அழைத்து "இந்தப் பொறுப்பற்ற சேவகனுக்குப் பத்து கசையடி கொடு" என்று உத்தரவிட்டான்.

சேவகன் சிரிக்க ஆரம்பித்து விட்டான். "இடுக்கண் வருங்கால் நகுக" என்று படித்துப் புரிந்து வைத்திருந்தவன் போலும். மன்னனுக்கு ஆத்திரம் இன்னமும் அதிகமானது. "நீ சிரித்ததற்கு சரியான காரணம் சொல்லாவிட்டால் இன்னமும் பத்து கசையடி" என்று உறுமினான்.

சேவகன் சொன்னான். "மகா மன்னரே. இன்று நான் மட்டும்தான் அதிகாலையில் இரட்டைக் காக்கைகளைப் பார்த்தேன். கை மேல் பலன் கிடைத்து விட்டது அல்லவா?" என்றான்.

மன்னருக்கு சுருக்கென்று ஏதோ உரைத்தது. சோதிடர் கூட தப்பினேன் பிழைத்தேன் என ஓடிவிட்டார்!!!

**மூடநம்பிக்கை கொள்வது நல்லதல்ல**

**சிந்திக்க**

**நம்மிடம் எதுவும் இல்லை என நினைப்பது ஞானம்: நம்மைத் தவிர எதுவுமில்லை என நினைப்பதுஆணவம் ஆகும்.**

**பாராட்டு பெறுவோர்**

*பி.பிரசாந்தன், 104, பிரதான வீதி நிலியடி, கண்ணியா*

பி.கிர்ஷாந், உவர்மலை விவேகானந்தா கல்லூரி


*வி.லோஷனி, வன்னுவர் வீதி, ஆலங்கேணி கிழக்கு*



தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
வயதெல்லை : 12 வயதிற்கு குறைந்த மாணவர்கள் மாத்திரம்

***அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

*சு.ரேஷ்மன், தரம் - 05 செல்வநாயகபுர மகா வித்தியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஒரு வட்டத்தின் ஆரை எவ்வளவாக இருக்கும் போது அவ்வட்டத்தின் பரிதியின் எண் பெறுமானம் அதன் பரப்பளவின் எண் பெறுமானத்திற்குச் சமமாக இருக்குமெனக் காண்க.

02. a + b ஒரு நிறை வர்க்கமாகவும் b + c ஒரு நிறை கனமாகவும் உள்ள a, b, c என்னும் மூன்று அடுத்துள்ள நேர் நிறைவெண்களைக் காண்க

03. ஒரு பெருக்கல் விருத்தியின் ஐந்தாம் உறுப்பின் வர்க்கம் இரண்டாம் உறுப்பிற்குச் சமனாகும். அதன் நான்காம் உறுப்பு 16 எனின்,
1. 7ம் உறுப்பைக் காண்க.
2. முதல் ஐந்து உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

04. இரு சம பக்க முக்கோணி ABC யில் AB = AC ஆகும். P ஆனது BC யில் அமைந்துள்ள யாதாயினும் ஒரு புள்ளியாகு மெனின், $AB^2 - AP^2 = BP.PC$ என நிறுவுக

05. $x^2 - bx - 5 = 0$ எனும் சமன்பாட்டின் ஒரு மூலகம் -2 எனின்,
1. மற்றைய மூலகம் யாது?
2. b இன் பெறுமானம் காண்க.

**பகுதி 02**

01. நிலையான வைப்புகளுக்கு ஆண்டுதோறும் 12சதவீத எளிய வட்டி கொடுக்கப்படும்.
1. ரூ60,000த்தை ஓர் ஆண்டிற்கு மேற்குறித்த கணக்கில் வைப்புச் செய்யும் போது ஆண்டின் இறுதியில் கிடைக்கும் வட்டியையும், மொத்தப் பணத்தையும் காண்க.
2. ரூபா 60,000த்தை மேற்குறித்த கணக்கில் வைப்புச் செய்யாமல் ஆண்டுதோறும் பங்குலாபமாக 18சதவீதத்தைக் கொடுக்கும் கம்பனி ஒன்றின் ரூ10 பங்குகளை ரூபா 15வீதம் கொள்வனவு செய்ய பயன்படுத்தலாம். அப்போது கம்பனியில் இருந்து கிடைக்கும் ஆண்டு வட்டியைக் காண்க.

## பாடம் : வரலாறு

01. இங்கிலாந்தில் முதன் முதலில் கைத்தொழில் புரட்சி உருவானது எந்நூற்றாண்டில் ஆகும்?
1. 19ம் நூற்றாண்டில் 2. 17ம் நூற்றாண்டில்
3. 20ம் நூற்றாண்டில் 4. 21ம் நூற்றாண்டில்

02. புராதன காலத்தில் இசிகிர என அழைக்கப்பட்டது யாரை என பின்வரும் கூற்றுக்களில் இருந்து தெரிவு செய்க.
1. அநுராதபுர கால அமைச்சர்களின் செயலாளரை
2. பொலன்னறுவை கால சேனாதிபதியை
3. யாழ்ப்பாண தீபகற்பத்திற்கு மன்னனின் பிரதிநிதியாக இருந்தவரை
4. கம்பளை இராசதானியின் பண்டக சாலை பொறுப்பாளரை

03. இலங்கையில் அமைந்துள்ள பொலநறுவை இராசதானிக்கு ஜனநாபுரம் எனப் பெயர் சூட்டியோர் யார்?
1. சோழர் 2. சேரர் 3. பாண்டியர் 4. நாயக்கர்

04. கலாசாரப் பத்தெழுச்சி போன்று அரசியலமைப்பு சீர்திருத்த இயக்கத்திற்கும் மிகப் பெரிய பங்களிப்பைச் செய்த அமையம்
1. இலங்கை தேசிய சங்கம் 2. சைவ பரிபாலன சபை
3. அமுதிய இயக்கம் 4. மகாபோதி சங்கம்

06. கீழ்வரும் எல்லா நிகழ்ச்சிகளும் பின்வரும் எதன் விளைவாகக் கருதப்படலாம்?
- மனித உரிமைகள் பற்றிய பிரகடனத்தை வெளியிடுதல்
- பிரபுக்களினதும் உயர் வகுப்பின் மதகுருக்களினதும் அதிகாரங்களை நீக்கல்
- சட்டவாக்கத்திற்கு 750 பேர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்த அரசனின் அதிகாரங்களை மட்டுப்படுத்தல்
- அரசனின் விருப்பத்தின் பேரில் மக்களைச் சிறைச்சாலைக்கு அனுப்புவதைத் தடை செய்தல்

1. ருசியப் புரட்சி 2. வியென்னா மாநாடு
3. பிரெஞ்சு புரட்சி 4. காபனாரி இயக்கம்

ஆசிரியர் . திரு.த.ராஜ்குமார் (N.C.A.T/ HNDA)
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

## Grammar

**Fill in he blanks in the following short exchanges using words from th given box. Write the correct letters in he blanks.**

1. This is my album. Look at all these (1) ..............................
2. I like this table bu I don't like the (2) .............................. on it.
3. Isn't this park lovely. Look at those beautiful (3) ..............................
4. That dog looks hungry. Lets give it some (4) ..............................
5. I like these (5) .............................. Blue is my (6) .............................. colour.

| | | |
|---|---|---|
| (a) buterflies | (b) favourite | (c) skirts |
| (d) vase | (e) photos | (f) biscuits |

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### பதவியல்

- இறந்த கால இடைநிலைகள் : த், ட், ற், இன், ன், இ
  - செய்தான்= செய்+ த்+ ஆன்
  - உண்டான்= உண்+ ட்+ ஆன்
  - தின்றான்= தின்+ ற்+ ஆன்
  - ஓடினான்= ஓடு+ இன்+ ஆன்
  - போனான்= போ+ ன்+ ஆன்
  - கூடியது= கூடு+ இ+ அ+ து
- நிகழ்கால இடைநிலைகள் : ஆநின்று, கின்று, கிறு
  - நடவாநின்றான்= நட+ ஆநின்று+ ஆன்
  - நடக்கின்றான்= நட+ கின்று+ ஆன்
  - நடக்கிறான்= நட+ கிறு+ ஆன்
  - ஆநின்று என்னும் இடைநிலை தற்கால வழக்கில் இல்லை.
- எதிர் கால இடைநிலைகள்
  - உண்பான்= உண்+ ப்+ ஆன்
  - செய்வான்= செய்+ வ்+ ஆன்
- எதிர்மறை இடைநிலைகள் : இல், அல், அன்
  - நடந்திலன்= நடந்து+ இல்+ அன்
  - நடக்கின்றிலன்= நட+ கின்று+ இல் + அன்
  - நடக்கலன்= நட+ க்+ க்+ அல் + அன்
  - நடவாதான்= நட+ வ்+ ஆ+ த + ஆன்

தெரிநிலை வினைகளில் இடைநிலைகளே பெரும்பாலும் காலங்காட்டும். சில சந்தர்ப்பங்களில் விகுதிகளும் பகுதிகளும் காலங்காட்டுவதுண்டு.



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**

ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : விஞ்ஞானம்

01. தேசிய சுண்ணாம்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் சுண்ணாம்பு கல்லில் அடங்கும் பொருள் எது?
1. கல்சியம் ஒட்சைட்டு 2. கல்சியம் காபனேற்று
3. கல்சியம் பொசுபேற்று 4. கல்சியம் சல்பேற்று

02. டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த பிரயோகிக்கப்படும் B.T.I பக்டீரியா விலை மிக்கது. ஆகவே அதனைப் பயனுறுதி வாய்ந்த விதத்தில் பயன்படுத்துவதற்கு பின்வரும் எந்த யோசனை மிகவும் உகந்தது?
1. நுளம்புகள் பரவத்தக்க எல்லா நீர்த்தேக்கங்களிலும் தெளிக்க வேண்டும்
2. டெங்கு நுளம்புத் தொல்லை உள்ள பிரதேசங்களில் துப்பரவற்ற நீர் சேர்ந்திருக்கும் நீர்த்தேக்கங்களில் தெளிக்க வேண்டும்
3. டெங்கு நுளம்புத் தொல்லை உள்ள பிரதேசங்களில் தூயநீர் தேங்கியுள்ள சிறிய இடங்களில் தெளிக்க வேண்டும்.
4. குப்பை கூலங்கள் சேரும் எல்லா இடங்களிலும் தெளிக்க வேண்டும்

03. முட்புதர் உள்ள காட்டில் வாழும் நீண்ட கொம்புகளை உடைய விலங்குக் கூட்டம் ஒன்று விரைவாக ஓட முடியாமையினால் இரைகொன்றுண்ணிகளுக்கு இரையாகி படிப்படியாக அழிந்து போயிற்று. இதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது
1. வாழ்க்கைப் போர் 2. மிகையான குடித்தொகை
3. தக்கனபிழைத்து வாழ்தல் 4. தேர்வு

04. பாரம்பரிய இயல்புகளை அடுத்த சந்ததிக்குத் தலைமுறையுரிமை பெறச் செய்வதற்கு ஒரு வகையான கலத்தில் இருக்க வேண்டிய அத்தியவசிய புன்னங்களம்?
1. கலமென்சவ்வு 2. கொல்கிய உபகரணம்
3. கரு 4. இழைமணி

05. ஒடுக்கற்பிரிவு பின்வரும் எந்நிலைமையில் ஏற்படும்?
1. நுகம் முளையமாக மாறும் போது
2. முளையம் முதிர்மூலவுருவாக மாறும் போது
3. எல்லா உடற் கலங்களும் வளரும் போது
4. சூல்களினதும் விந்துகளினதும் உற்பத்தியின் போது

06. ஒரு குறித்த வாயு பயன்படுத்தப்படும் சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.
- ரொக்கெற்றுகளில் எரிபொருள் தகனத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது
- உருக்குக் கைத்தொழிலில் திரவ இரும்பைச் சுத்திகரிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.
- ஒட்சி அசற்றலீன் சுவாலையை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகின்றது.

பின்வரும் எவ்வாயு பற்றி மேற்குறித்த தகவல்கள் கூறப்பட்டுள்ளன?
1. ஐதரசன் 2. நைதரசன் 3. ஒட்சிசன் 4. அசற்றலீன்

ஆசிரியர் . திரு.த.சேகரன் (B.Sc Agric (Hons))
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு கிழக்கு மாநிலம்....

வேண்டுமேயொழிய தனிப் பௌத்த சிங்கள அரசாக இருக்கக் கூடாது என்ற முன்மொழிவும் உள்ளடக்கப் பட்டிருந்தது.

தற்போது வடமாகாண சபையால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையில் வடக்குகிழக்கில் முஸ்லிம் தன்னாட்சி அலகும், தென்னிலங்கையில் மலையக மக்கள் ஓர் அலகாகவும் அங்கீகரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர ஒற்றையாட்சிக்கு பதிலாக சமஸ்டி முறை அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் இலங்கை பிரசை ஒருவர் மற்றுமொருவருக்கு கீழானவர் என்ற முறைமை மாற்றப்பட வேண்டும், எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருக்ககூடிய ஒரு இனம் மற்றைய இனத்தை விட கூடிய பயனை கோர கூடாது, வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைக்கும் போது முஸ்லிம் தன்னாட்சி பிராந்திய சபை உருவாக்கப்பட வேண்டும், இந்த தன்னாட்சி பிராந்தியத்தின் நிலை பரிமாணம் மற்றும் நியாயாதிக்கம் என்பன தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளால் கலந்துரையாடப்பட்டு முடிவெடுக்கப்படும், மொழி ரீதியிலான தமிழ் பேசும் வடக்கு கிழக்கு மாநிலமானது மாநில நாடாளுமன்றம் ஒன்றை கொண்டிருக்கும், இதேபோன்ற ஒழுங்குகள் சிங்கள மொழி மூலமான மாநிலத்தில் மலையக தமிழர்களுக்காக மேற்கொள்ளப்பட வேண்டும், அதிகாரம் ஒரு சமூகத்திற்கு மட்டும் பகிரப்படாது, அனைத்து சமூகத்திற்கும் பகிரப்படுவதை நாட்டின் நாடாளுமன்றம் உறுதி செய்ய வேண்டும் என்பவை உள்ளங்கியுள்ளன.

### குச்சவெளிக்கு....

ஏனைய வலயங்களை விட நிர்வாக விடயங்களிலும் குறிப்பாக ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் பௌதீக வளத்தேவைகள் என்பன மிகவும் பின் தங்கிய நிலையிலே காணப்படுகின்றது எனவே இப்பிரதேசத்திற்கான தனியான கல்வி வலயம் ஒன்றை பெற்றுத்தர ஆவணை செய்யுமாறு மாகாணசபை உறுப்பினர் ஏ.ஆர்எம் அன்வரால் இப் பிரேரணை முன் வைக்கப்பட்டது.

அதனை மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.உதுமான்லெப்பை வழி மொழிந்தார்.

எனினும் மாகாணக் கல்வி அமைச்சர் மேற்படி அமர்விற்கு வருகை தராததால் குறித்த பிரேரணையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26ம் திகதிய அமர்வின்போது சமர்ப்பிக்கும்படி தவிசாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பெண்களைக்...

நாடளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றமையை பெண்கள் அமைப்பென்ற வகையில் திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பானது வன்மையாக கண்டிக்கின்றது.

இவ்வகை சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்றுவருவது மிகவும் வருத்தப்பட வேண்டிய விடயமாகும். எனவே உரிய அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைமைகள் இதனை கவனத்தில் எடுத்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கணனி வழவமைப்பாளருக்கு வேலைவாய்ப்பு உண்டு**
**அனுபவம் தேவையில்லை**
**0777 555 738**

### பனாமா பேப்பர்ஸ்....

மதிப்பிலான சொத்துக்கள் முறைகேடாகவும் வரி கட்டுவதிலிருந்து தப்பிக்கவும், கறுப்புப் பணத்தை பதுக்கவும் வெளிநாடுகளில் குவிக்கப்பட்டுள்ள தகவலகள் வெளி வந்துள்ளன.

அமெரிக்கத் தலைநகரான வோசிங்டனை தலைமையகமாகக் கொண்டு செயல்படும் புலனாய்வு இதழியலாளர்களின் சர்வதேச கூட்டியக்கமே (International Consortium of Investigative Journalism) இந்த தகவல்களை "பனாமா பேப்பர்ஸ்" எனும் பெயரில் வெளியிட்டுள்ளது.

ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் சொத்து வாங்கிய நிறுவனங்கள் பெயர்கள் மட்டுமே தற்போது வெளியிடப் பட்டிருக்கின்றன. இன்னும் முழுமையான விவரங்கள் வெளியிடப்படாமல், ரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன. "இது வெறும் ஆரம்பம்தான்" என்கிறார்கள் அதனை காத்துக் கொண்டிருப்பவர்கள்.

சொத்து குவித்த பிரபலங்கள் பட்டியலில் ஐக்கிய ராச்சியப் பிரதமர் டேவிட் கமரனின் தகப்பன், ரஷ்ய மற்றும் ஆர்ஜன்டின சனாதிபதிகள், கால்பந்து வீரர் மெஸி, எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக், லிபிய முன்னாள் ஜனாதிபதி கடாபி மட்டுமில்லாமல் பிரபல நடிகர் அமிதாப்பச்சன், அவருடைய மருமகளும் நடிகையுமான ஐஸ்வர்யா ராய், டி.எல்.எஃப் நிறுவனர் கே.பி. சிங் மற்றும் அவருடைய குடும்பத்தினர் ஒன்பது பேர், ஆகியோர் உட்பட 500 இந்தியர்களின் பெயர்கள் இடம்பெற்று இருக்கின்றன.

இத்தகைய மாபெரும் மோசடிகளுக்கு உதவியாக கடந்த 40 வருடங்களாக இருந்து வந்த பனாமாவின் மொசக் ஃபான்செகா சட்ட உதவி நிறுவனத்தின் மீது இதுவரை எந்த ஒரு குற்றச்சாட்டுகளும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### அதிபர்கள்...

அசிரியர் பற்றாக்குறை மற்றும் பௌதீக வளங்கள் குறைபாடு போன்றவற்றை காரணம் காட்டி மாணவர்களை வீதிகளில் இறக்கி ஆர்ப்பாட்டங்களில ஈடுபடுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலம் அதிபர்கள் மாணவர்களை பிழையாக வழிநடத்தக் கூடாது எனவும் அவர் அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பெறுபேற்றை அதிகரிக்க வைப்பதில் ஆர்வம் காட்டுவது குறைந்துள்ள நிலை நீடிப்பது எமது எதிர்கால சந்ததிகளின் முன்னேற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

கலைமகள் மகா வித்தியாலய அதிபர் பெறுபேற்றை அதிகரிக்கச் செய்வதற்கான நடவடிக்கையில் மேற்கொண்டதால் இப்பாடசாலை மாணவர்கள் 9ஏ சித்தியைப் பெற்றுள்ளார்கள்.

இப்படியான பாடசாலையின் பௌதீக தேவைகளையும் உயர்பெறுபேறு ரீதியான முன்னேற்ற செயற்பாடுகளை என் போன்ற அரசியல்வாதிகள் தேடிச் சென்று தீர்ப்பார்கள். நானும் அவ்வாரே என அவர் தெரிவித்தார்.

### மாமனிதர் வ.விக்னேஸ்....

அவர் பலதடவைகள் தெரிவித்திருந்த போதும் தமிழ் மக்களுக்காகத் தனது குரலை மரணத்தை அணைக்கும் வரை ஒலித்துக்கொண்டே இருந்தார்.

ஜெனீவாவில் அரசாங்கத்திற்கும் தமிழழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போதே இக்கொலை நிகழ்ந்தது.

கொலை நிகழ்ந்த இடமா உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கித் தலைமையகமானது உச்சப் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருந்தது. குறித்த பிரதேசத்திற்கு உட்புகும்போது படையினரின் கண்காணிப்பு நிலையைக் கடந்தே செல்ல வேண்டும் என்பதுடன் அவர் கொள்ளல்லட்ட இடத்திலிருந்து சில யார்கள் தூரத்திலேயே ஸ்ரீலங்கா கடற்படை அத்தியட்சகரின் அலுவலகமும் ஸ்ரீலங்கா கடற்படையின் கிழக்குக் கட்டளைத் தலைமையகமும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொலையாளிகள் தப்பிச் செல்ல முடியாத வலயத்திற்குள் நிகழ்ந்த இக்கொலையானது கொலையாளிகள் யார் என்பதை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியிருப்பதாக அன்றைய செய்தித்தாள்கள் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொல்லப்படுவதற்கு முதல் நாள் இரவும் வானொலிச் சேவையொன்றுக்கு அவர் அளித்த செவ்வியில் சமாதானம் நிகழ்கின்ற போதும் கடற்படையினரால் கைக்கொள்ளப் -பட்டிருந்த கடல் வலயச் சட்டம் திருகோணமலைத் தமிழ் மீனவர்களை எவ்வளவு தூரம் பாதிப்படையச் செய்கின்றது என்பதைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்- தக்கது.

அவருக்கு மரணத்தின் பின் "மாமனிதர்" பட்டம் வழங்கி கௌரவிக் கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

மீனவர்களையும் கால்நடை வளர்ப்போரையும் எம்முடன் சேர்ந்து நிம்மதியாக வாழ வழிவகை செய்ய வேண்டும் என தங்களை மிகவும் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.என இக்கடிதம் அமையப் பெற்றுள்ளது.

### தாக்குதலுக்கு இலக்கான....

தாக்குதலுக்கு ஆளாகிய ஆறு தமிழ் மாணவர்களும் நான்கு நாட்களுக்கும் மேலாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்து பின்னர் வெளியேறியிருந்தனர்.

வைத்தியசாலையில் காவல்துறைப் பாதுகாப்பு அம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதும் பீடத்தை விட்டு வெளியேறிய சிங்கள மாணவனின் தகப்பன் வைத்திய -சாலைக்குச் சென்று அத்தமிழ் மாணவர்களை அச்சுறுத்திய சம்பவமும் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பல்வேறு தரப்பினரின் அழுத்தங்கள் எதிர்கொண்ட பல்கலைக்கழக நிர்வாகம் குறித்த தாக்குதல் தொடர்பான விசாரணைகளை நடாத்தக் குழுவொன்றை நியமித்திருந்தது.

அக்குழுவே தற்போது தமிழ் மாணவர்களையும் இடைநிறுத்தும் முடிவை முன்மொழிந்திருப்பதாகத் தெரிகின்றது.

பீடத்தை விட்டு வெளியேறிய மாணவன் தற்போது தான் பகிடிவதை காரணமாகவே வெளியேறியதாகக் விசாரணைக் குழுவிடம் கூறியிருப்பதாகவும் அவரது சாட்சியின் அடிப்படையிலேயே தாக்குதலுக்கு இலக்கான தமிழ் மாணவர்களையும் இடைநிறுத்தம் தடைக்கு உட்படுத்த முன்மொழிந்திருப்பதாகவும் அத்தகவல் தெரிவிக்கின்றது.

உண்மையில் பகிடிவதை நடைபெற்றதா என்பது தொடர்பாக முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

தனியே சிங்கள மாணவரை மட்டும் இடைநிறுத்தினால் கல்வி நடவடிக்கை -களைத் தொடர முடியாது என்ற காரணத்தால் இவ்வாறு முன்மொழியப் -பட்டுள்ளதாகவும் கசிந்த தகவல் தெரிவிக்கின்றது.

### சம்பூர் அனல்....

சம்பூர் அனல் மின் நிலையம் அமைப்பது இப்பிரதேசத்தின் பூர்வீக குடி மக்கள் என்ற அடிப்படையில் எமது வாழ்வாதாரத்தையும் இயல்பு வாழ்வையும் தமது அடையாளத்தையும் இல்லாமல் செய்யும் ஒரு நடவடிக்கையாகும். எனவே சம்பூர் அனல் மின் நிலைய திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும் என வலியுறுத்தி மூதூர் கிழக்கைச் சேர்ந்த பூர்வீக பழங்குடியின மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 7ம் திகதி கவனயீர்ப்பு ஒன்றினை சந்தோசபுரம் சிவசக்தி வித்தியாலயத்திற்கு முன் தமது கவனயீர்ப்பை நடாத்தி மக்கள் கையெழுத்துக்களுடன் கூடிய கடிதமொன்றை சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்

அக் கடிதம் பின்வருமாறு அமைகிறது.

இலங்கைத்தீவில் வாழும் பூர்வீக பழங்குடிகளான நாங்கள் இயக்கர் நாகர் வழிவந்த வழித்தோன்றல் களாக எம்மைக்கருதுகிறோம். எம்மில் ஒரு பிரிவினர் மகியங்கனையை அண்டிய பகுதிகளில் ஒரு பிரிவாகவும் நாம் வாகரை, வெருகல் மற்றும் மூதூரை அண்டியும் சுமார் 35 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியிலும் வாழ்ந்து வருகின்றோம். எமக்கான பூர்வீக மொழி ஒன்றை நாம் பேச்சு வழக்கில் கொண்டுள்ளோம். எம்மில் சிலர் இன்னும் அதனைப்பேசி வருகின்றனர். ஆனாலும் நாம் தமிழ் மொழியையே பேச்சு மொழியாகக் கொண்டுள்ளோம்.

கடந்து போன வன்முறைச் சூழல் முழுவதும் யுத்தத்திற்கும் வறுமைக்கும் இடையில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து தற்போது தான் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றோம். எமது கிராமங்களைச் சுற்றியிருக்கும் வனப்பகுதியே எமக்கான பிரதான சீவனோபாய மார்க்கம் என்பதை தாங்கள் அறிவீர்கள். நீண்ட நெடுந்துயர் வாய்ந்த எங்கள் வாழ்க்கைக் காலம் தாங்கள் ஆட்சிக்கு வந்ததன் பின்பு மாற்றமடையும் என்கிற நம்பிக்கையில் எங்கள் நாளாந்த தொழில்களில் முனைப்புடன் ஈடுபடுகின்றோம். கடந்த ஒரு மாத காலமாக எமது பகுதியில் மிகவும் பாரதூரமான செயற்பாடுகள் நடைபெற்று வருவது எமக்கு மிகுந்த வேதனையை அளிக்கிறது. அனல்மின் நிலையம் ஒன்று இப்பகுதியில் அமைக்கப் படப் போவதாகவும் இனிமேல் எங்களால் சமையலுக்கான விறகைக் கூட எமது வனப் பகுதியிலிருந்து பெறமுடியாதென்றும் கூறி எங்கள் பகுதியைச் சுற்றி பாரிய வேலிகளை அமைத்து வருகிறார்கள்.

தற்போது அடைக்கப்படும் இப்பகுதியின் வனம் முழுவதும் காலம் காலமாக எமது சீவனோபாயத்திற்கான வனப்பகுதியாகும். எங்களது குழந்தைகள் வறுமையிலும் செம்மையான எதிர்காலத்தைப் பெறவேண்டும் என்பதற்காக நாங்கள் முயற்சித்து எங்கள் பகுதியில் கட்டுவித்த தி-கிறவல்குழி சிவசக்தி வித்தியாலயத்தின் வேலியோரமாக தற்போதைய வேலி அமைக்கப் படுகின்றது.

இந்த நாட்டிலே வாழுகின்ற பழங்குடியினர் ஏனைய நாடுகளைப் போலவே பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்பதை நன்குணர்ந்தவர் என்கிற வகையிலும் எமக்கான வனப்பகுதியை எமக்கென மீட்டுத்தந்து எமது சீவனோபாயத்தையும் எமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை பாதிக்கும் செயற்பாடுகளை நிறுத்த உத்தரவிட்டும் எமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் பாதுகாப்புடன் இயற்கையான வாழ்க்கையை தொடர்ந்து வரும் இப்பகுதி விவசாயிகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இஸ்லாத்தின் பார்வையில்

## முட்டாள்கள் தினம்




பைபிளின்படி நோவா (நூஹ் (அலை) தான் முதல் முட்டாள் (நவூதுபில்லாஹ்) எனச்சொல்லப்படுகிறது. காரணம் வெள்ளப்பிரளயம் ஏற்பட்டு பூமி காய்வதற்கு முன்னால் நோவா ஒரு புறாவை அனுப்பி காய்ந்த, வறண்ட நிலத்தை தேடச் சொல்கிறார். ஈரமான பூமியில் காய்ந்த நிலம் எங்கே இருக்கும்? அதனால் தான் அவர் ஒரு முட்டாள் என்றும் அதை மையமாக வைத்தே முட்டாள்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது எனவும் சொல்லப்படுகிறது.

13ம் நூற்றாண்டில் பிரிட்டிஷில் வாழ்ந்த ஜான் என்ற மன்னர் எங்கே படையெடுத்துச் சென்றாலும் அந்தப்பகுதி "பொதுச்சொத்தாக" ஆக்கப்பட்டுவிடும். கௌதம் என்ற பகுதியில் நாட்டிங்கம்ஷைர் என்ற ஊருக்குள் அவர் படையெடுத்து வரும்போது அவ்வூர்வாசிகள் தங்களின் ஊரை மன்னர் அபகரித்துவிடக்கூடாது என்பதற்காக அவர்களை முட்டாள்களாக ஆக்க நினைத்து தண்ணீரில் நீந்துகின்ற மீனைப்பிடித்து தரையில் விடுவதும் பிறகு மீண்டும் நீரில் விடுவதுமான பல முட்டாள்தனமான காரியங்களைச் செய்கின்றனர்.

அவர்களின் முட்டாள்தனங்களைக்கண்ட மன்னர் அவர்களைத் தண்டிக்கிறார் இது தான் ஏப்ரல் 1 அன்று முட்டாள்கள் தினம் உருவாகக் காரணம் எனச்சொல்லப்படுகிறது. இன்னும் இவை போன்ற பல கற்பனைக் கதைகளும் புராணக்கதைகளும் சொல்லப்படுகிறது.

தொடரும் .. ..

– காஜா முஹிய்யுத்தீன் –

# ஜெபம்

**விவிலியத் தீவிரவாதிகள் என்பவர் யார்?**

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிவினைச் சபைகளுக்குள்ளே தோன்றியது விவிலியத் தீவிரவாதம் என்னும் ஒரு போக்கு. விவிலியத் தீவிரவாதத்தின் படி விவிலியத்தை படித்து புரிந்து கொள்ளவோ அல்லது விளக்கம் கூறவோ விவிலியம் ஒன்றே போதும். ஆகவே விவிலிய வார்த்தைகளை அப்படியே புரிந்து கொள்ளவேண்டும் (literal meaning and interpretation) என்பது அவர்களது வாதம்.

கத்தோலிக்கத் திருச்சபையில் விவிலியத்திற்கு முன்பாகவே பாரம்பரியம் இருப்பதால் பாரம்பரிய செய்திகள், ஏற்கனவே மறைவல்லுனர்கள் விவிலியத்தை விளக்கிய தொகுப்புகள், பாரம்பரிய நடைமுறை வழக்கங்கள் ஆகியவற்றையும் கருத்தில் கொள்ளப்பட்டு விவிலிய பகுதிகளுக்கு விளக்கம் தரப்படுகிறது.

இயேசு செய்தவை வேறு பலவும் உண்டு. அவற்றை ஒவ்வொன்றாக எழுதினால், எழுதப்படும் நூல்களை உலகமே கொள்ளாது எனக் கருதுகிறேன். -யோவான் 21:25

**கத்தோலிக்கத் திருச்சபையில் பிரிவுகள் உண்டா?**



இயேசு கிறிஸ்துவால் நிறுவப்பட்ட, அப்போஸ்தலர் பேதுருவிடம் ஒப்புவிக்கப்பட்ட, அவர்களின் வழிவந்த திருத் தந்தையால் வழிநடத்தப்படுவரும் கத்தோலிக்கத் திருச்சபை ஒன்றுதான். கத்தோலிக்கத் திருச் சபையில் பல ரீதிகள் (வழிபாட்டு முறையில் மாறுபட்ட வகையில்) இருக்கின்றன. லத்தீன் ரீதி, பசைாட்டைன் ரீதி, கோப்திக் ரீதி, எத்தியோப்பிய ரீதி, கல்தீன் ரீதி, அர்மீனியர் ரீதி, சீரோ மலபார், சீரோ மலங்கரா, சீரியன் ரீதி. இவை அனைத்துத்தும் ஒரே கத்தோலிக்க விசுவாசத்தை அறிக்கையிடுபவை.

தொடரும் ..

www.bible.me

# இவ்வார இராசி பலன்



**மேஷம்** : பிறர் விவகாரத்தில் தலையிட்டு, சமரசம் பேச சென்றால், உங்களுக்கு தான் பிரச்னை வரும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். ஓரளவு லாபம் கிடைக்கும்.



**ரிஷபம்** : பேச்சில் நிதானமும் இருக்கும். பணம் சேமிப்பாகும். விற்பனை செழிக்கும். லாபம் கூடும். பணியாளர்களுக்கு வேலைப்பளு குறையும்.



**மிதுனம்** : பேச்சு வசீகரமாக அமைந்து, புதிய நண்பர்களை பெற்றுத் தரும். வங்கிக் கடன் கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளுவும், வருமானமும் கூடும்.



**கடகம்**: அதிக வருமானம் பெற, தேவையான பணிகளில் ஈடுபடுவீர்கள். எதிர்ப்பாளரால் இருந்த தொந்தரவு குறையும். வியாபாரம் செழிக்கும்



**சிம்மம்**: நன்மையும், புகழும் பெருமளவில் வந்து சேரும். தொழில், வியாபாரம் அபரிமிதமாக வளர்ச்சி பெறும். பணியாளர்கள் சலுகைகள் பெறுவர்.



**கன்னி**: மனம் உற்சாகமாக இருக்கும். சமூகத்தில் அந்தஸ்து கூடும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி கூடும். பணவரவில் முன்னேற்றம் காணப்படும்.



**துலாம்** : மனதில் புத்துணர்வு ஏற்படும். நல்லவர்களின் உதவி கிடைக்கும். தாமதமான செயல்களில் முன்னேற்றம் உண்டாகும். வழக்கில் சுமுகமான தீர்வு கிடைக்கும்.



**விருச்சிகம்**: உடல்நிலை நன்றாக இருக்கும். வெகுநாள் வாங்க நினைத்த வீட்டுபொருள் வாங்குவீர்கள். பணியாளர்கள் பணிகளை வேகமாக முடிப்பர்.



**தனுசு** : புதிய திட்டங்களை செயல்படுத்த நல்ல வாய்ப்பு வரும். கடன் தொந்தரவு குறையும். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பால் வளர்ச்சி பெறலாம்.



**மகரம்** :புதியவர்களிடம் இதமான அணுகுமுறையை பின்பற்றுவீர்கள். கொடுத்த கடன் பணம் திரும்ப கிடைக்கும். வியாபாரம் செழித்து சேமிப்பு கூடும்.



**கும்பம்**: மனதில் இருந்த நம்பகக்குறைவான தன்மை விலகும். பணிகளை உற்சாகத்துடன் நிறைவேற்றுவீர்கள். ஏற்படும் இடையூறுகளை சாமர்த்தியமாக சரி செய்வீர்கள்.



**மீனம்** : கடினமான பணியையும் எளிதாக நிறைவேற்றுவீர்கள். கடன் வாங்குவதை தவிர்த்தல் நல்லது. வியாபாரத்தில் வளர்ச்சியும், லாபமும் அதிகரிக்கும்.

# புதுவருஷப் பிறப்புக் கருமமும் வாக்கியம் - கணித பஞ்சாங்கம் பற்றிய கண்ணோட்டமும் - பலனும்

சமூகதீபம்: கலைமாமணி
கலாபூசணம் அ.அரசரெத்தினம்
சேனையூர் ஸ்ரீ நாகம்பாள் ஆலய பிரதமகுரு

தையிலே தொடங்கும் தமிழர் திருநாளைத் தொடர்ந்து வருவது தமிழ் சிங்களப் புத்தாண்டு திருநாளாகும். இது வாக்கிய பஞ்சாங்கப்படி 13.04.2016 புதன்கிழமை மு.இ நாடி 31 விநாடி 15 (மணி 06.36) மேற்குறிப்பிட்ட வேளையிற் 60 சுற்றுவட்டத்தில் 30வது வருடமாக "துர்முகி" சித்திரைப் புதுவருஷம் பிறக்கின்றது.

அன்று பி.ப 02.36 முதல் மு.இ 10.36 வரையான காலப்பகுதி விஷா புண்ணிய காலம் இவ்வேளையில் காலில் வேப்பிலை சிரசில் கடப்பமிலை வைத்து ஸ்நானம் செய்தல் முறையாகும்.

புத்தாடையாக நல்ல பச்சை, வெள்ளை நிறங்கள் சொல்லப்பட்டுள்ளது. இதனையே திருக்கணித பஞ்சாங்கமும் கூறியுள்ளது. ஆனால் துர்முகி சித்திரைப் புது வருடம் பிறக்கும் நேரம் 2016.04.13 புதன்கிழமை மு.இரவு 07.48 என சொல்லப்பட்டிருப்பதுடன் மருத்துநீர் வைத்து ஸ்நானம் செய்யும் நேரமும், தலை காலுக்கு வைக்கும் மூலிகையில் மாற்றமுமாக, அதாவது தலையில் வேப்பிலை, காலில் கொன்றையிலையும் வைத்து அன்று பி.ப 3.48 முதல் மு.இரவு 11.48 வரை எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தோச நட்சத்திரங்களாக மிருகசீரடம் 3, 4ம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம், விசாகம் 4ம் கால், அனுசம், நேட்டை, புரட்டாதி என திருக்கணிதம் எதிர்வு கூறியுள்ளது. வாக்கியத்தில் இவற்றையும் சேர்த்து மேலதிகமாக சுவாதி, சதயம் சேர்க்கப்பட்டு பூரட்டாதி விடப்பட்டுள்ளது.

இந்த பஞ்சாங்க தாரர்கள் காலத்துக்கு காலம் இப்படி ஏதாவது ஒருவருக்கொருவர் வித்தியாசமாக எழுதுவதும், இதனால் இந்துக்கள் குழப்பமடைவதும் இன்று நேற்றல்ல தொடர்ந்து வரும் இழுபறிகள் தான். முக்கியமாக இந்துக்களின் சைவ விழாக்கள் விரதங்களின் போதுதான் பெரும் சர்ச்சைக்குள்ளாவதும் சர்ச்சையைத் தீர்த்து வைக்க அகில இலங்கை இந்துமா மன்றம், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இந்து அமைப்புக்களின் கருத்துக்களை கேட்டறியவும் ஏற்படுகிறது.

இலங்கையிலுள்ள இப்பஞ்சாங்கம் இரண்டுமே அங்கீகாரம் பெற்றிருப்பதுடன் தமிழ் மக்களின் ஏகோபித்த அபிமானத்தையும் பெற்றிருப்பதால் சரியானவற்றை பொதுமக்கள் அறிதலுக்கு தர வேண்டியது இரு பஞ்சாங்க கணிதர்களின் பாரிய தார்மீக கடமையாகும்.

இனி புதுவருடப் பலன் இரு பஞ்சாங்கப்படியும் பொதுவாக:

**மிக்கான துர்முகியில் வேளாண்மை யேறுமே**
**தொக்கமழை பின்னே சொரியுமே - மிக்கான**
**குச்சர தேசத்திற் குறைதீர வேவிளையும்**
**அச்சமில்லை வெள்ளையரி தாம்**

என துர்முகி சித்திரை புது வருடப் பலன் பகர்ந்துள்ளது.

**பலன்**

முன் மழை சமம். பின்மழை அதிகம். காற்று மிகுதி. அதிக பூமி பயிரிடப்படுதல், கல்வி விருத்தி, சமயப்பற்று, திருடர், துஸ்டர் தண்டனை பெறுதல், தேச சுகம், அரசியல் பலமடைதல், சிறு தானிய விருத்தி, நோய் நீக்கம் உண்டாம்.

படிப்படியாக மக்களின் எதிர்பார்ப்பு அரசால் நிறைவேறும் எனவும் இரு பஞ்சாங்க படியும் அறிய முடிகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

கிரிக்கட்

## ஆரம்பமாகின்றது ஐ.பி.எல் போட்டிகள்





உலகிலுள்ள மிகப்பெரிய உள்ளூர் இருபதுக்கு-20 லீக் தொடரான இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடர், இன்று சனிக்கிழமை ஆரம்பிக்கவுள்ளது. நடப்புச் சம்பியன்களான மும்பை இந்தியன்ஸ் அணி, இவ்வாண்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள றைசிங் பூனே சுப்பர்ஜையன்ட்ஸ் அணிக்கெதிராக, மும்பை வன்கெடே மைதானத்தில் மோதும் போட்டியுடன், இவ்வாண்டுக்கான தொடர் ஆரம்பிக்கவுள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் ஆகிய இரு அணிகளும் 2 ஆண்டுகளுக்குத் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், றைசிங் பூனே சுப்பர்ஜையன்ட்ஸ், குஜராத் லயன்ஸ் ஆகிய இரண்டு அணிகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளதால், இம்முறை தொடர், வழக்கத்தை விட வித்தியாசமானதாக மாறியுள்ளது.

இம்முறை இலங்கை வீரர்களில் லசித் மலிங்க, திஸர பெரேரா இருவரும் மாத்திரமே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள வீரர்களாகக் காணப்படுகின்றனர். மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக லசித் மலிங்கவும் றைசிங் பூனே சுப்பர்ஜையன்ட்ஸ் சார்பாக திஸர பெரேராவுமே இவ்வாறு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இதில், லசித் மலிங்கவின் உடல்நிலை தொடர்பான சந்தேகம் தொடர்ந்தும் நிலவுகின்ற நிலையில், திஸர பெரேரா மாத்திரமே இத்தொடரில் பங்குபற்றும் ஒரே இலங்கையராக மாறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## சுனில் நரைனிற்கு தடை நீக்கம்

கிரிக்கட்




மேற்கிந்திய தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் கொல்கத்த அணிக்காக 55 போட்டிகளில் களம் கண்டு 74 விக்கெட்டுகளை இதுவரை வீழ்த்தியுள்ளார். கடந்த 2014 ஆம் ஆண்டு சாம்பியன்ஸ் லீக் தொடரின் போது இவரது பந்து வீச்சின் மீது முதன் முதலில் சந்தேகம் எழுப்பப்பட்டது. இதனையடுத்து 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண தொடரில் சுனில் நரைன் தானாக முன்வந்து விலகிக் கொண்டார்.

இதனிடையே மீண்டும் அணிக்கு திரும்பிய நரேனுக்கு இலங்கை தொடரின் போது பந்து வீச்சு தொடர்பாக மீண்டும் சிக்கல் எழுந்தது. இந்நிலையில் டி20 உலகக் கிண்ண போட்டிகளில் இருந்தும் விலகி இருந்த நரேன், தற்போது இதற்கான சோதனையில் ஈடுபட்டதை அடுத்து அவருக்கு சர்வதேச கிரிக்கெட் ஆணையம் அனுமதி அளித்துள்ளது. இதனைத் தொடர்ந்து சுனில் நரைன் ஐ.பி.எல் தொடரில் பங்கேற்பது உறுதியாகியுள்ளது.

கிரிக்கட்

## அடுத்த பருவகாலத்திற்கான பகலிரவு ஆட்டங்கள் டிசம்பர் மற்றும் ஜனவரியில்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, தென்னாபிரிக்க மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கெதிராக பகலிரவு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அடுத்த பருவகாலத்தில் இப்போட்டிகள் இடம்பெறுமென அறிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவுக்கும் நியூசிலாந்துக்குமிடையில் கடந்தாண்டு இடம்பெற்ற உலகின் முதலாவது பகலிரவு டெஸ்ட் போட்டியைத் தொடர்ந்து, பகலிரவு டெஸ்ட் போட்டிகளுக்கான ஆர்வம் அதிகரித்துள்ளது. இந்நிலையிலேயே, அவுஸ்திரேலியாவின் அடுத்த பருவகாலத்தின்போது, இந்தப் போட்டிகளை நடத்த எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி, முதலாவது பகலிரவு டெஸ்ட் போட்டியை நடத்திய அடிலெய்ட் மைதானம், தென்னாபிரிக்கா-வுக்கெதிரான போட்டியையும் பிறிஸ்பேண் மைதானம், பாகிஸ்தானுக்கெ-திரான டெஸ்ட் போட்டியையும் நடத்தவுள்ளது.

இதுவரை வெளிவந்துள்ள தகவல்களின்படி, பாகிஸ்தானுக்கெதிரான போட்டி டிசெம்பரிலும் தென்னாபிரிக்கா-வுக்கெதிரான போட்டி ஜனவரியிலும் இடம்பெறவுள்ளன.

முதலாவது பகலிரவு டெஸ்ட் போட்டியில், நியூசிலாந்து அணியும் அவுஸ்திரேலிய அணியும் மோதியதோடு, அந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## டெரன் சமி என மாற்றப்பட்டது மைதானத்தின் பெயர்

கிரிக்கட்

உலக இருபதுக்கு-20 தொடரை மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிகொண்டுள்ள நிலையில், சென். லூசியாவிலுள்ள போசெஜூர் கிரிக்கெட் மைதானமொ ு, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் டெரன் சமியின் பெயரில் மாற்றப்பட்டுள்ளது. அத்தோடு, அதே மைதானத்தில் அரங்கொன்று, ஜோன்சன் சார்ள்ஸின் பெயரில் பெயரிடப்படவுள்ளது. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த டெரன் சமி, "நான் மிகவும் கௌரவமாக உணர்கிறேன். நான் கௌரவமடைவதோடு, ஆசிர்வதிக்கப்-பட்டவனாக உணர்கிறேன். நன்றி, சென். லூசியாவைச் சேர்ந்தவர்களே எனத் தெரிவித்தார்.

போசெஜூர் கிரிக்கெட் மைதானமே, மேற்கிந்தியத் தீவுகளில் பகலிரவு ஒருநாள் சர்வதேசப் போட்டியை நடத்திய முதல் மைதானம் என்பதோடு, இதுவரையில் 4 டெஸ்ட் போட்டிகள், 26 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 12 இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகள் ஆகியவற்றை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



டென்னிஸ்

## "விரும்பத்தகாத வீராங்கனை ஷரபோவா" – டொமினிகா சிபுல்கோவா

ரஷ்ய முன்னணி டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா கடந்த மாதம் ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கினார். 'மெல்டோனியம்' என்ற ஊக்கமருந்தை கவனக்குறைவாக பயன்படுத்தி விட்டதாக ஒப்புக்கொண்ட ஷரபோவா உடனடியாக இடைநீக்கம் செய்யப்பட்டார். அவருக்கு எத்தனை ஆண்டுகள் தடை விதிக்கப்படும் என்பதை சர்வதேச டென்னிஸ் சம்மேளனம் இன்னும் முடிவு செய்யவில்லை.

ஊக்கமருந்து உபயோகப்படுத்தியதை தைரிய-மாக ஒப்புக்கொண்ட ஷரபோவா-வின் செயல் பாராட்டுக்குரியது என்று செரீனா வில்லியம்ஸ் கூறினார். இந்த நிலையில் ஷரபோவா மீது, உலக தரவரிசையில் 53ஆவது இடம் வகிக்கும் சுலோவக்கியாவின் டொமினிகா சிபுல்கோவா கடும் தாக்குதல் தொடுத்திருக்கிறார். சிபுல்கோவா, போலந்து நாட்டின் விளையாட்டுப் பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில், 'ஷரபோவாவுக்காக நான் எந்த வகையிலும் வருத்தப்படமாட்டேன். டென்னிஸ் களத்தில் அவரை தவற விடுகிறோமே என்று நினைக்கவும் மாட்டேன். அவர் விரும்பத்தகாத ஒரு வீராங்கனை. தற்பெருமை கொண்டவர். ஒரே அறையில் அருகருகே உட்கார்ந்தாலும் ஒரு 'ஹலோ' கூட சொல்லமாட்டார்' என்று கூறியுள்ளார்.



கிரிக்கட்

## மீண்டும் சேர்ந்தனரா அனுஷ்கா – விராட்


பாலிவுட் நடிகை அனுஷ்கா சர்மாவும், இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லியும் கடந்த 2 ஆண்டுகளாக தீவிரமாக காதலித்து வந்தனர். இந்த நிலையில் கடந்த மாதம் இருவரும் கருத்து வேறுபாட்டால் பிரிந்தனர். இருப்பினும் அனுஷ்கா கோஹ்லியின் சிறப்பான ஆட்டத்திற்கு வாழ்த்து தெரிவித்து வந்தார். அதேபோல் கோஹ்லியும் உடைந்து போன காதலை மீண்டும் ஒட்ட வைக்க அனுஷ்காவின் சகோதரர் மூலம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வந்தார். இந்த நிலையில் அனுஷ்கா சர்மா- விராட் கோஹ்லி மீண்டும் இணைந்து விட்டதாக கூறப்படுகிறது.

இவர்கள் மும்பையில் உள்ள ஹொட்டல் ஒன்றில் இரவு விருந்தில் கலந்து கொண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதலுக்கு இலக்கான தமிழ் மாணவர்களுக்கும் வகுப்புத் தடை?

## நியாயமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதா எனச் சந்தேகம்




**தி**ருகோணமலைப் பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ் மாணவர்கள் தாக்கப்பட்ட விடயம் தொடர்பான விசாரணைகளில் ஈடுபட்டுவரும் குழு, தாக்கப்பட்ட தமிழ் மாணவர்களையும் பல்கலைக்கழகத்திலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்க முன்மொழிந்திருப்பதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. சித்த மருத்துவ பீடத்தில் கல்வி பயிழும் முதலாம்வருட சிங்கள மாணவர் ஒருவர் தனிப்பட்ட காரணங்களால் கல்வியைத் தொடர முடியாது என பீடத்தை விட்டு வெளியேறியதாகவும் அதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்ட சில சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்கள் ஆறு பேரைத் தாக்கிய சம்பவம் கடந்த மாதம் நிகழ்ந்திருந்தது.

பக் 17

# வெப்பநிலை மேலும் அதிகரிக்கும்

**பூ**கோள வெப்பநிலை மேலும் அதிகரிக்கும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

உலகின் வெப்பநிலையைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாக மேகத்தின் நீர்ப்பதன் அளவு கருதப்படுகின்றது. பனியாக இறுகிய நீர்ப்பிடிப்பை மேகங்கள் கொண்டிருக்குமாயின் வெப்பநிலை கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் எனத் தெரிவித்துள்ள விஞ்ஞானிகள் மேகத்தில் நீருறைநிலை குறைவாக இருப்பதால் வெப்பம் அதிகரிக்கும் வாயப்பிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்

தொழிற்துறை வளர்ச்சியால் காபனீரொட்சைட்டின் அளவு இரட்டிப்பாயிருப்பதே இதற்கான மூல காரணம் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# கல்குடா வலயத்தில் இடமாற்றம் செய்வது அரசியல்வாதிகளே!!!!

## வலயக் கல்விப் பணிப்பாளர் சாடல்

**ம**ட்டக்களப்பு, கல்குடா கல்வி வலயத்தில் அதிகாரிகளுக்குத் தெரியாமல் அரசியல்வாதிகளால் ஆசிரியர் இடமாற்றங்கள் நடைபெறுகிறன.

இந்த நிலைமை தொடருமானால் வலயத்தின் கல்வி அபிவிருத்தியில் பாரிய பின்னடைவை எதிர்நோக்க நேரிடும் என வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சிறிகிருஸ்ணராஜா தெரிவித்துள்ளார்.

எமது சமூகம் மிகவும் க்'டப்பட்டுக் கொண்டிருக்கிறது. வாழ்வாதார உதவிகள் இல்லை முன்னாள் போரளிகளுக்கு எதுவித உதவிகளும் இல்லை. அவர்கள் பரிதவிக்கின்றார்கள்.

எமது மக்கள் பசியால், பட்டினியால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் இந்த நிலையை மாற்றியமைக்கின்ற போதுதான் கல்வியைக் கட்டியெழுப்ப முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

# பெண்களைக் கடத்தி வன்புணர்ந்த செயலுக்கு பெண்கள் வலையமைப்பு கடும் கண்டனம்

**ம**ட்டக்களப்பு கிரான் பிரதேசத்தில் பெண்கள் இருவரைக் கடத்திச் சென்று வன்புணர்ந்த செயலைக் கடுமையாக எதிர்ப்பதாக திருகோணமலை மாவட்டப் பெண்கள் வலையமைப்பின் ஊடக அறிக்கை தெரிவித்துள்ளது.

பெண்கள் வலையமைப்பின் செயலாளர் செல்வி. க வினுசியா விடுத்துள்ள இச்செய்தியில் "மட்டக்களப்பு கிரான் தெற்கு பிரதேச செயலக பிரிவுக்குப்பட்ட வாகனேரி பிரதேசத்தில் 13 வயது சிறுமி மற்றும் 19 வயதான யுவதி என இரண்டு பெண்கள் இரு இளைஞர்களால் வானொன்றில் கடத்திச் சென்று துஸ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாகவும் குறித்த யுவதிகள் இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டள்ளதாகவும் ஊடகங்கள் மூலமாக தெரியவருகின்றது. குறிப்பாக இவ்வகை சம்பவங்கள்




# "அதிபர்கள் வளங்களைப் பெறுவதிலேயே கவனம் - மாணவர்களின் கல்வியில் அல்ல"

## ஜெனார்த்தனன் மா.உ குற்றச்சாட்டு



**அ**னேகமான அதிபர்கள் பாடசாலையின் பௌதீக வளங்களான கட்டிடம், வீதி, தளபாடங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டிவருவதை காண முடிகிறது.

மாறாக பாடசாலையின் மாணவர்களின் பரீட்சை - களில் பெறுபேற்றை அதிகரிக்க வைப்பதில் ஆர்வம் காட்டுவது குறைந்துள்ளது என கிழக்கு மாகாண சபையின் திருகோணமலை மாவட்டத்திற்கான உறுப்பினரான ஜெனார்த்தனன் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த 05ம் திகதி மாலை திருகோணமலை அன்புவழிபுரம் தி - கலைமகள் மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலையின்..........

பக் 17

# "அரச படைகளே அதிகாரிகளைக் கொலை செய்தது"

## சிங்கள ஊடகம் குற்றச்சாட்டு

**வி**டுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்தி, படைஅதிகாரிகள், மற்றும் அரசியல்வாதிகளை சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை படுகொலை செய்ததாக, குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளில் தெரியவந்திருப்பதாக சத்ஹண்ட என்ற சிங்கள வாரஇதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியின் படி படுகொலை செய்யப் - பட்டவர்களில், முன்னாள் படை அதிகாரியும், பின்னர் அரசியலில் ஈடுபட்ட - வருமான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, மற்றும் சிறப்பு அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி மூத்த கண்காணிப் -பாளர் ஊபுல் செனிவிரத்ன ஆகியோரும் உள்ளடங்கி -யுள்ளனர்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற் போனமை தொடர்பாக, நடத்தப்பட்ட விசாரணைகளிலேயே இந்த விபரங்களும் தெரியவந்திருக் -கின்றன.

நீதிமன்ற உத்தரவையடுத்து சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்ட ஆவணங் - களிலேயே இதுபற்றிய விபரங்களும் அடங்கி - யிருந்தன.

அந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் உயர்மட்டங்களுடன் இருந்த தொடர்புகளைப் பயன்படுத்தியே, சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவு இந்தப் படுகொலை - களில் ஈடுபட்டுள்ளது.

1999 டிசெம்பர் 18ஆம் நாள், ஜாஎலவில் ஐதேகவின் பேரணியில் மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவின் மீதான தற்கொலைத் தாக்குதலை சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவே திட்டமிட்டிருந்தது என அச்செய்தி தொடர்கின்றது.

புதினப்பலகை

இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 09.04.2016ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org